இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
ilakku.org
வாராந்த மின்னிதழ்
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1
இதழ் 272 | சனி, பெப்ரவரி 03, 2024 | 12 பக்கங்கள்



# தமிழரசுத் தலைமை பதவி சிறீதரனுக்கு முள்கிரீடமா?

அகிலன்

# "கூட்டமைப்பு" குறித்து பேச முன் தமிழரசு ஐக்கியப்பட வேண்டும்!



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்
**சுரேஷ் பிரேமச்சந்திரன்** செவ்வி


© 2024 இலக்கு இணையம்

## இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் ஜனநாயகத்தை ஒடுக்குவதாக இருக்கும் - ஜூலிசங்

இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் பொருளாதார மீட்சியை நோக்கிப் பயணிக்கும் இலங்கைக்கு எதிர்மறையான சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இணையவழிப் பாதுகாப்பு உத்தேசச் சட்டம் இணைய வழிக் குற்றங்களை ஒடுக்குவதற்கு உரு



வாக்கப்பட்டாலும் அது நாட்டின் ஜனநாயகத்தை ஒடுக்குவதாகவே அமைந்துள்ளதாக சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்கள் குறிப்பிடுவதாகவும் இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## யாழ் மாணவர்களின் கறுப்புப் தின பேரணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு

பெப்ரவரி 4 ம் நாள் யாழ்ப் பாண பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம்கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது ஆதரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது "பெப்ரவரி 4ம் நாள், 76 வருடங்களுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை பிரித்தானியரிடமிருந்து கையகப்படுத்திய சிங்கள – பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தை சூறையாடிய கறுப்பு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## முஸ்லீம் நாட்டில் 84 மில்லியன் டொலர்கள் செலவில் இந்தியா கட்டிய ஆலயம்

இஸ்லாமிய நாடான ஐக்கிய அரபு அமீரக அரசு இலவசமாக வழங்கிய 13 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள பாப்ஸ் இந்து கோவில் எதிர்வரும் 14ம் நாள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

84 மில்லியன் டொலர்கள் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயத்தை 42 நாடுகளை சோந்த 60 இற்கு மேற்பட்ட தூதுவர்களை அழைத்து சென்று காண்பித்துள்ளார் ஐக்கிய அரபு அமீரகத்திற்கான இந்திய தூதுவர் சுஞ்ஜேய் சுதீர்.

மத்திய கிழக்கில் பழமை




யான முறைப்படி கற்களால் கட்டப்பட்ட முதலாவது ஆலயமாக இந்த ஆலயம் உள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாட்டு தூதுவர்களை இந்தியா கடந்த செவ்வாய்க்கிழமை(30) இந்த ஆலயத்திற்கு அழைத்துச்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## அழகுசாதனப்பொருட்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள் – பிரித்தானியா எச்சரிக்கை

தோல்களை அழகுபடுத்த சிறுவர்களால் பயன் படுத்தப்படும் பெருமளவான அழகு சாதனப்பொருட்கள் தோல்களில் மீளமுடியாத மாற்றங்களை மற்றும் பிரச்சனைகளை ஏற்படுத்திவருவதாக தோல் நோய்கள் தொடர்பான பிரித்தானியாவின் சபை தெரிவித்துள்ளது.

சமூகவலைத்தளங்களில் காணும் விளம்பரங்களை பார்த்துவிட்டு மிகவும் விலை உயர்ந்த அழகுசாதனப்பொருட்களை வாங்கித்தரும்படி சிறுவர்கள் பெற்றோர்களை கேட்கின்றனர். ஆனால் அவற்றில் பல மிகவும் ஆபத்தான இரசாயனப் பொருட்களை கொண்டுள்ளன.



அதில் உள்ள exfoliating acids போன்ற அமிலங்கள் மிகவும் ஆபத்தானவை தோல் அலேர்ஜி மற்றும் எக்சிமா போன்ற நோய்களை தோற்றுவிக்க கூடியவை.

சமூகவலைத்தளங்களில் விளம்பரப்படுத்தப்பட்ட அழகு சாதனப்பொருட்களை பயன் படுத்திய தனது பெண்பிள்ளையின் தோல்களில் அலேர்ஜி தாக்கம்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## எட்டு மாதங்களில் வீழ்ந்த 3 எப்–16 விமானங்கள்

அமெரிக்காவின் மற்றுமொரு எப்-16 விமானம் தென் கொரியாவின் கடலில் வீழ்ந்து நொருங்கியுள்ளது. ஊக்ரைனின் கள முனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விமானம் என மேற்குலக நாடுகளினால் வர்ணிக்கப்பட்டு உக்ரைன் விமானிகளுக்கு பயிற்சிகள்கொடுக்கப்படும்இந்தவிமானத்தின் மூன்றாவது வீழ்ச்சி இது.



அதாவது கடந்த ஒரு வருடத்தில் 3 விமானங்கள் தென் கொரியாவில் வீழ்ந்து நொருங்கியுள்ளன.

தென்கொரியாவில் உள்ள குன்சான் அமெரிக்க வான் படைத் தளத்திற்கு அண்மையில் உள்ள கடலில் விமானம் புதன் கிழமை (31) காலை வீழ்ந்துள்ளது. விமானி விமானத்தில் இருந்து குறித்த போதும் சில மணிநேரங்க ளின் பின்னர் அவர் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

விமானம் வீழ்ந்ததற்கான காரணம் தெரியவில்லை எனவும், அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதுடன், விமானத்தை கண்டறிந்து மீட்கும் பணிகள் இடம்பெற்றுவருவதாக தென் கொரியாவில் உள்ள அமெரிக்க வான்படையின் 8ஆவது பிரிவின் கட்டளை அதிகாரி Col. Matthew C. Gaetke தெரிவித்துள்ளதார்.

கடந்த டிசம்பர் மாதமும் இதே Yellow Sea பகுதியில் எப்-16 விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியிருந்தது. அந்த விமானமும் 8ஆவது வான்படைப் பிரிவுக்கு சொந்தமானது.

ஒவ்வொன்றும் 63 மில்லியன் டொலர்கள் பெறுமதியான அமெரிக்காவின் இரண்டு எப்-16 விமானங்கள் இரண்டு மாதங்களினுள் வீழ்ந்து நொருங்கியது மிகுந்து ஆச்சரியங்களை தோற்றுவித்துள்ளதாக படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் மே மாதமும் ஒரு எப்-16 விமானம் தென்கொரியாவின் Osan Air Base பகுதியில் வீழ்ந்து நொருங்கியிருந்தது.

## இந்தியாவுக்கான ஆயுத விற்பனையை தாமதப்படுத்தும் அமெரிக்கா

இந்தியாவுக்கு விற்பனை செய்வதாக உடன்பாடுகள் எட்டப்பட்ட 3 பில்லியன் டொலர்கள் பெறுமதியான MQ-9B Predator armed drones என்ற 31 ஆளில்லாத உளவு மற்றும் தாக்குதல் விமானங்களின் விற்பனையை அமெரிகா அரசு தாமதப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவில் உள்ள சீக்கிய அமைப்பு ஒன்றின் தலைவரான குர்பத்வங் சிங் பன்னும் என்பவரை இந்திய அரசு அமெரிக்காவில் வைத்து கொலை செய்ய முற்பட் டதாக அமெரிக்கா குற்றம் சுமத்தி யிருந்ததுடன், கொலையில் தொடர்புடையவர்களை கைது



செய்தும் உள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை தமது நாட்டின் இறைமையை மீறும் செயல் என்பதால் அமெரிக்காவின் காங்கிரஸ் சபை அதிக சினம் கொண்டுள்ளதாகவும், இந்த உடன்படிக்கையை நிறுத்தும் அழுத்தங்களை பைடன் அரசுக்கு கொடுத்துவருவதாகவும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## உக்ரைன் அரசுக்குள் வலுக்கும் உட்பூசல்கள்



உக்ரைனின் அரச தலைவர் வலடீமிர் செலன்ஸ்கிக்கும், அந்த நாட்டின் முப்படைகளின் படைத்தளபதி வலரி சலுஸ்னிக்கும் இடையிலான மோதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. படைத்தளபதியை பதவியில் இருந்து விலகுமாறு செலன்ஸ்கி அறிவுறுத்தியதாகவும் ஆனால் அதனை அமெரிக்கா தலையிட்டு தடுத்துள்ளதாகவும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட த நியூ யோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இரகசியமாக படைத்தளபதியை பதவியில் இருந்து அகற்றுவதற்கு செலன்ஸ்கி முற்பட்டிருந்தார். ஆனால் அந்த செய்தி வெளியில் தெரியவந்ததால் அவர் தற்போது அதனை கைவிட்டுள்ளார். மேலும் படைத்தளபதியின் இடத்திற்கு புதிய ஒருவரை நியமிப்பதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன என கடந்த செவ்வாய்க்கிழமை (30) அந்த நாளேடு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# சிறிலங்காவின் சுதந்திரநாள்! ஈழத்தமிழர்களின் கரிநாள்!

## பறிக்கப்பட்ட தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மீளப்பெற்றுத்தர வலியுறுத்தி மாபெரும் கண்டனப் பேரணி

ஊடக அறிக்கை 30.01.2024

*“ஒரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு என்பது அந்நாட்டில் உள்ள இனக்குழுக்களை சமமாக நடத்துவதை அடிப்படையாகக் கொண்டது. ஒரு இனக்குழுவிற்கு சமத்துவம் வழங்கப்படாத பட்சத்தில், சமத்துவம் மற்றும் இறுதியில் பிரிவினைக்கான அதன் உரிமைகோரல்களை வலியுறுத்த உரிமை உள்ளது என்பதை சுயநிர்ணய உரிமை, மக்களின் சமத்துவம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய சர்வதேச சட்டம் வலியுறுத்துகிறது”*

*இவ்வரையறைக்குள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மீளப்பெற்றுத் தர வலியுறுத்தி, எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் நாள் அன்று பிரித்தானிய தலைநகர் லண்ட னில் பாரிய கவனயீர்ப்பு பேரணிநடை பெறவுள்ளது.*

*உலகெங்கிலும் இருந்து பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழின உணர்வாளர்கள் கலந்துகொண்டு உரிமைக்குரல் எழுப்பவுள்ள இப் பேரணியானது சிறிலங்கா உயர் ஆணையர் அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து நடைபவனியாக செல்லவுள்ளது. சிறிலங்கா உயர் ஆணைய இல்லத்தின் முன்றலில் இருந்து (இலக்கம் .13, ஹைட் பார்க் கார்டன்ஸ், லண்டன், W2 2LU) எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ம் நாள், ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 11 மணிக்கு ஆரம்பமாகி ஐக்கிய இராச்சியத்தின் மன்னரின் நிர்வாகத் தலைமையகம் மற்றும் அரச வதிவிடமாக விளங்கும் பக்கிங்ஹம் அரண்மனையை நோக்கிச்சென்று பின் அங்கிருந்து பாராளுமன்ற சதுக்கத்தை வந்தடையும்.*

*பேரணியின் நிறைவில், மேன்மைதங்கிய பிரித்தானிய அரசர் மூன்றாம் சார்ள்ஸ், பிரித்தானியப் பிரதம மந்திரி மதிப்புக்குரிய ரிஷி சுனக் மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை மீளப் பெற்றுத்தருவதில் அவர்களுக்கு உள்ள பொறுப்பின் ஆழத்தை வலியுறுத்தும் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.*

*அனைத்துலக ஈழத் தமிழர் பேரவை (ICET), தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC), சர்வதேச தமிழீழ இராஜதந்திர கட்டமைப்பு (IDCTE), மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு (TYO) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்பேரணியில் அனைத்து ஊடகங்களும் பங்கேற்று எமது தேசத்துக்கான பணியை ஆற்றுவீர்கள் என நம்புகிறோம். இப்பேரணியில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் தமிழர்கள் என்ற தேசிய உணர்வில் ஒன்றிணைவதால், தமிழீழத் தேசியக் கொடியுடன் தத்தமது நாட்டின் தேசியக் கொடிகளையும் பெருமையுடன் ஏந்திச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

Tamil Coordinating Comittee United Kingdom

Tamil Youth Organisation

International Council of Eelam Tamils

International Diplomatic Council of Tamil Eelam

# பலஸ்தீனியர் இறைமையும் ஈழத்தமிழர் இறைமையும்

இருதேச அரசு கொள்கையின் அடிப்படையில் பலஸ்தீனிய தேசிய பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் பிரித்தானியா தயாராகிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியைப் பிரித்தானியாவின் வெளிவிவகாரச் செயலாளர் சேர். டேவிட் கமரோன் தெரியப்படுத்தியுள்ளார். கடந்த ஆண்டு அக்டோபர் 7 முதல் 2024 சனவரி 30க்கு இடையில் இஸ்ரேயல் பலஸ்தீனிய மக்கள் மேலான காட்டுமிராண்டி யுத்தத்தால் 25000க்கு மேற்பட்ட பலஸ்தீனியக் குழந்தைகள் பெண்கள் வலுவிழந்தவர்கள் நோயாளிகள் பொதுமக்களை இனஅழிப்புச் செய்து 1.6 மில்லியன் பலஸ்தீனியர்களை அவர்களின் வாழ்விடங்களை தாக்கியழித்து வெளியேற்றி அவர்களது வாழ்வாதார உட்கட்டுமானங்களையும் பாழ்படுத்தி அந்தப் பகுதிகளுக்குத் திரும்பி வந்து அவர்கள் குடியமர முடியாமல் செய்த இன்றைய சூழலில் பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளரின் இந்த இருதேசத் தீர்வு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

‘இஸ்ரேயல் சனநாயக ஆட்சி நடைபெறும் நாடல்ல இனஒதுக்கல் அடிப்படையில் விலக்குதல் ஆட்சியை முன்னெடுக்கும் நாடு’ என்று அனைத்துலக மனித உரிமைகள் மற்றும் அமைதிக்கான அமைப்புக்கள் உலகளாவிய நிலையில் மக்கள் மயப்படுத்தியதன் விளைவே இன்று அனைத்துலக மக்களின் அழுத்தம் காரணமாக பலஸ்தீனியர்களுக்கான தேசத்தையும் ஏற்கின்றோம் என்கின்ற இருதேச அரசுத் தீர்வு பலம் பெறுகிறது. 1998ம் ஆண்டு உரோம சாசனத்தின் படி அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கட்டமைக்கப்பட்ட பொழுது "திட்டமிட்ட ஆக்கிரமிப்பு மூலமும் மேலாண்மை வழியாகவும் ஒரு இனத்துவக் குழுவை மற்றொரு இனத்துவக்குழவை ஒடுக்கி அவர்கள் வாழும் பகுதியைத் தங்களுடையதாக்கத் துன்புறுத்தல் செய்வது மனிதாயத்துக்கு எதிரான குற்றம். அத்துடன் இது அடிப்படை மனித உரிமைகளையும் அனைத்துலகச் சட்டங்களையும் அந்தக் குழு அனுபவிப்பதைத் தடுக்கும் குற்றமுமாகும்."எனத் தெளிவாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையிலேயே தென்னாபிரிக்கா இஸ்ரேயலை அனைத்துலக நீதிக்காக நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றது. நீதிமன்ற நெறிபப்டுத்தலாக இஸ்ரேயல் அனைத்துலக யுத்த மரபுசாசனங்களை சிலவிடயங்களில் மீறியிருக்கிறது என்று கூறினாலும் இஸ்ரேயலை பலஸ்தீனத்தின் மீதான யுத்தத்தை நிறுத்தும்படி நெறிப்படுத்தாது அதனை அனைத்துலக யுத்தச் சட்டங்களைப் பின்பற்றும்படியும் இனஅழிப்பு நடைபெறாத வகையில் அதனுடைய இராணுவம் செயற்படுவதை உறுதி செய்யும்படியுமே நெறிப்படுத்தியது. இந்நிலையிலேயே பிரித்தானிய அமெரிக்க அரசுக்களின் பலஸ்தீனியர்களுக்கான இருதேச அரசுத் தீர்வு தங்களின் அனைத்துலக கண்ணியத்தை அனைத்துலக புதிய அரசியல் ஒழுங்கில் காப்பாற்றும் முயற்சியாக முன்மொழியப்பட்டு வருகிறது. இருதேச அரசுத் தேர்வை, இஸ்ரேயலை பலஸ்தீனிய மக்களிடை காலனித்துவ ஆட்சியைப் பயன்படுத்தி உருவாக்கிய பிரித்தானியாவும் அதனை மத்திய கிழக்குக்கான தனது கைப்பொம்மை அரசாக ஆயுத நிதி உதவிகள் மூலம் மாற்றி 1967இல் படையெடுப்பு மூலம் இஸ்ரேயல் யோர்தான் அரசிலிருந்து கைப்பற்றிய வெஸ்ட்பாங் மற்றும் கிழக்கு யெருசலேம் பகுதிகளையும் அதே போரில் எகிப்தின் அரசிலிருந்து கைப்பற்றிய காசா பகுதியினையும் இன்று வரை இஸ்ரேயல் தனது அரசு என்று ஆக்கிரமித்து 700000 இஸ்ரேலியர்களை ஆக்கிரமித்த நிலங்களில் குடிகளாக்கி ஆட்சி செய்வதை உறுதிப்படுத்தி நிற்கும் அமெரிக்காவும், இன்று சீனாவை முன்னிறுத்திய புதிய உலக அரசியல் ஒழுங்கு மேலெழும் சூழலில் புதிய உலக அரசியல் பொருளாதார செயற்கை நுண்ணறிவு கருவிகளின் பயன்பாட்டு மாற்றங்களுக்கு முகங்கொடுக்க இயலாது பலஸ்தீனிய தேசம் இஸ்ரேலிய தேசம் என்கின்ற இருதேச அரசுத் தீர்வு குறித்துப் பேசத் தொடங்கியுள்ளன. இது சமுகநீதியின் அடிப்படையிலோ அல்லது உலக அமைதிக்கான நோக்கிலோ அல்ல தங்களின் இருப்பைப் பாதுகாக்கும் போக்கிலேயே இடம்பெறுகிறது.

ஆனால் இந்தத் தீர்வை இஸ்ரேயல் பலஸ்தீனத்தைத் தங்களுக்குச் சமமான அரசாக ஏற்க மறுத்து தங்களைவிட குறைவான "ஸ்ரேட் மைனஸ்" என்ற நிலையில் பாதுகாப்புக்கான ஆயுதப்படைகளை வைத்திருக்க அனுமதிக்கப்படாத நிதியிலும் வெளியுறவிலும் இஸ்ரேயலுக்குக் கட்டுப்பட்ட பலஸ்தீனிய இருப்பை ஏற்க விரும்புகிறார்கள். காரணம் முழுஅளவான அரசாக ஏற்றால் தாங்கள் இனத்துவ சிறுபான்மையாகி பலஸ்தீனியர்களில் தங்கி வாழும் நிலை உருவாகும் எனக் கருதுகின்றார்கள். ஆனால் கடந்த கால அனுபவங்களில் இஸ்ரேயல் அரேபியர்கள் மேலான யூத மேலாண்மையை நிறுவுவதற்குப் பலஸ்தீனியர்களை இனத்துடைப்பு இனஅழிப்பு பண்பாட்டு இனஅழிப்பு செய்யும் அரசியல் கொள்கைகள் கோட்பாடுகளையே தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். 2018 முதல் அரபு மொழியையும் உத்தியோகபூர்வ மொழி என்பதை மறுத்த சட்டத்தின் மூலம் இஸ்ரேயலில் ஐந்தில் ஒரு பகுதியில் உள்ள அரபுமொழி பேசுபவர்களுக்கு நாளாந்த வாழ்வு மறுப்பையும் ஏற்படுத்தினர். பலஸ்தீனியர்களும் இஸ்ரேலியரை குடியமர் மக்களாக ஏற்று அவர்களின் அரசியல் உரிமைகளைத் தாங்கள் அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்த விரும்புகின்றார்களே தவிர இஸ்ரேயலைத் தங்களுக்குச் சமமான அரசாக ஏற்கத் தயாரில்லை.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சனைக்கும் பலஸ்தீனிய தேசியப்பிரச்சினைக்கும் இடையில் உள்ள இனஒதுக்கல் இனவிலக்கல் இனஅழிப்பு குறித்த விடயங்களில் உள்ள ஒற்றுமைகளை மையப்படுத்தி இருதேச அரசுத் தீர்வு ஈழத்தமிழர்களுடைய தேசிய பிரச்சனைக்கும் இயைபுடையது என்கின்ற கருத்தாடல்களும் இப்போது எழுகின்றன. ஆனால் இஸ்ரேலியர்கள் தங்கள் தாய்நாட்டை விட்டுப் பாரிய புலப்பெயர்வு அடைந்து 985 ஆண்டுகளின் பின்னர் மீளவும் தங்கள் தொன்மைத் தாயகத்தில் குடிவரவு பெற்றவர்கள். அவ்வளவு ஆண்டுகளும் பலஸ்தீன மக்களின் இறைமையிலேயே அம்மண் இருந்த நிலையில் அவர்களுடனான பேச்சுக்கள் மூலமான மீள்குடியமர்வு இடம்பெறாததுதான் அங்குள்ள தேசியப் பிரச்சினை. ஆனால் ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிற உலகின் மூத்த மக்கள் இனம். இந்த இறைமையின் அடிப்படையிலான ஈழத்தமிழரின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளைப் பிரித்தானிய முடிக்குரிய அரசே தன்னிச்சையான செயல்களால் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் கட்டமைத்தது என்பதால் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது காலனித்துவ காலத்துத் தீர்க்கப்படாத பிரச்சினையாக ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினை. இதனாலேயே பிரித்தானிய காலனித்துவம் விலக்கப்பட்ட 76 வது ஆண்டு நிறைவான 04.02. 2024இல் பிரித்தானிய மாண்பமை மன்னரை நோக்கி ஈழத்தமிழர்கள் தேசமாக எழுந்து தங்கள் தன்னாட்சிக்குரலை எழுப்பி பிரித்தானிய மாண்பமை மன்னரிடம் உண்மைகளை உலகுக்கு உறுதிப்படுத்தி தங்களுடைய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் அடிப்படையில் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை அமைக்க உதவுமாறு பேரணி நடாத்துகின்றனர். பொருத்தமான காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தேவையான சனநாயகச் செயற்பாடு. மாண்பமை மன்னரும் அவரின் பிரித்தானிய அரசும் நீதியும் நேர்மையுமான முறையில் ஈழத்தமிழர்களின் தனியான அரசைத் தாங்களே தங்கள் ஆட்சி நலன் கருதி ஒன்றிணைத்ததால் இன்று ஈழத்தமிழர்களும் பலஸ்தீனிய மக்களை விட மிகமோசமான நிலையில சிறிலங்காவின் இனஅழிப்பு மூலமான தங்கள் இருப்பினை இழக்கும் நிலை மாறிட இயன்றன செய்ய வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகவே உள்ளது. ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் இறைமையற்ற பதவிகளுக்கான சங்கீதக் கதிரை விளையாட்டை விட்டு விலகி இறைமையை முன்னிலைப்படுத்தி சனநாயக வழிகளில் தங்கள் அரசியலை உறுதியுடனும் ஒற்றுமையாகவும் முன்னெடுக்கச் "சம்பந்தர் சகாப்தம்" என்ற இருள் படிந்த 14 ஆண்டுகளை முடித்துவைத்துள்ள புதிய தமிழரசுக்கட்சித் தலைவர் சிறீதரன் உரியன செய்து உலகத் தமிழர்களையும் இணைத்து சமுக முதலீடுகளால் வறுமையையும் அரசியல் அறிவூட்டலால் அறியாமையும் நீக்குவாராக!

**ஆசிரியர்**



# தமிழரசுத் தலைமை பதவி சிறீதரனுக்கு முள்கிரீடமா?

அகிலன்

தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவியை சிவஞானம் சிறீதரன் கைப்பற்றிக்கொண்டாலும், கட்சியை அவரால் கைப்பற்ற முடியுமா என்பதுதான் தமிழ் அரசியல் பரப்பில் இன்று எழுந்திருக்கும் கேள்வி. தலைமைப் பதவிக்கான போட்டியில் தோல்வியடைந்த சுமந்திரன், கட்சியைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதற்காக நன்கு திட்டமிட்ட முறையில் காய்களை நகர்த்திவருவதுதான் இந்தக் கேள்வி எழுவதற்குக் காரணம்!

தலைமைப் பதவிக்கான தேர்தல் முடிவடைந்து, செயலாளர், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களின் தெரிவுகள் “தொங்கு” நிலையில் இருக்கும் பின்னணியில், விரிவான கடிதம் ஒன்றை சிறீதரனுக்கு எழுதியிருக்கின்றார் சுமந்திரன். நட்பு ரீதியாக எழுதப்பட்ட ஒரு கடிதமாக இது தென்பட்டாலும், கூட சிறீதரன் எவ்வாறான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளார் என்பதையும் அது வெளிப்படுத்துகின்றது.

“எமது வரலாற்றில் முதன் முறையாக வாக்கெடுப்பினால் தெரிவு செய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடு வைபவ ரீதியாக பதிவியேற்பது முக்கியமான விடயமாகும். எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்புள்ளி வைக்கும். ஆகவே காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்தப் பகிரங்கப் பொது நிகழ்வை நடாத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்” என சிறிதரனுக்கு எழுதியிருக்கும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார் சுமந்திரன்.




“ஏற்கனவே நடந்த கட்சியின் நிர்வாகிகள் தெரிவு முடிந்த முடிவு” என்பதையும் இக்கடிதத்தில் சுமந்திரன் மறைமுகமாக குறிப்பிடுகிறார். “கட்சியாப்பு விதிகளுக்கு அமைவாகவும், சட்டப்படியும் தாங்களே இப்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைவர். கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று கோலாகலமாக நடைபெறவிருந்த பொது நிகழ்வு தவறான ஆலோசனைகளின் பேரிலும், கலந்துரையாடல் இன்றியும், அதிகாரமற்றதும் சட்டத்துக்கு முரணான அறிவிப்பினாலும் துரதிர்ஷ்டவசமாக பிற்போடப்பட்டுவிட்டது” என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வெளிப்படையாகப் பார்க்கும் போது சிறீதரன் விரைவாக தலைமைப் பொறுப்பை ஏற்பதில் அக்கறை உள்ளவர் போலவும், தமிழரசுக் கட்சிக்குள் உருவாகியிருக்கும் உட்கட்சிப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துவது போலவும் சுமந்திரனின் இந்தக் கடிதம் அமைந்திருக்கலாம். ஆனால், கட்சித் தலைமையை இழந்தாலும், கட்சி மீதான கட்டுப்பாட்டை தன்னுடைய கைகளில் எடுப்பதற்கான ஒரு உபாயங்களுடன்தான் சுமந்திரன் காய்நகர்த்துகிறார் என்பதையும் இந்தக் கடிதம் தெளிவாக உணர்த்துகிறது.

தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவியை இலக்கு வைத்து நீண்டகாலமாக இயங்கி வந்தவர் சுமந்திரன். கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனுடன் நெருக்கமாக உறவாடியதுடன், தமிழரசுக் கட்சி அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முக்கிய பேச்சுக்களில் கலந்துகொண்டவரும் அவர்தான். தமிழரசுக் கட்சியின் முக்கிய முடிவுகளும் அவரால்தான் எடுக்கப்பட்டது. சம்பந்தனின் மூப்பு - சுகவீனம் போன்றனவும், மாவை சேனாதிராஜாவின் இயலாமையும் சுமந்திரன் முன்னணிக்கு வருவதற்கு வழிவகுத்தது. அதனால், தன்னிச்சையாக முடிவெடுக்கக்கூடியவராக சுமந்திரன் இருந்துள்ளார்.




வடக்கில் மட்டுமன்றி, கிழக்கில் அம்பாறை வரையில் முக்கியமான வழக்குகளில் ஆஜராகி, தன்னுடைய செல்வாக்கை உயர்த்திக்கொள்வதில் கடந்த காலங்களில் அவர் தீவிரமாகச் செயற்பட்டு வந்திருக்கின்றார்.

அந்த வகையில், கட்சித் தலைமைப் பதவிக்கான தேர்தலில் தமக்குத்தான் வெற்றி கிடைக்கும் என அவர் உறுதியாக எதிர்பார்த்திருந்தார். பொதுக்குழு உறுப்பினர்களில் 200 பேருடைய ஆதரவு தனக்குக் கிடைக்கும் என அவர் நம்பியிருந்தார். ஊடக நேர்காணல் ஒன்றில் இதனை அவரே வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். ஒவ்வொரு உறுப்பினர்களாகச் சந்தித்து இந்த ஆதரவை அவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால், நடைபெற்ற தேர்தலில் 130 வாக்குகளை மட்டுமே அவரால் பெறமுடிந்தமை அவருக்கு பெரும் ஏமாற்றமாகவே இருந்தது. சுமந்திரனை பொறுத்தவரையில், அவர் தோல்விகளால் துவண்டுவிடும் ஒருவரல்ல. சந்தர்ப்பங்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தத் தெரிந்தவர். அடுத்த காய் நகர்த்லுக்கான தருணத்தை அவர் எதிர்பார்த்திருந்தார்.

செயலாளர் உட்பட செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் வரையில் அவர் காத்திருந்தார். அரசியல் கட்சி ஒன்றைப் பொறுத்தவரையில், மக்கள் மத்தியில் வசீகரம் மிக்க ஒருவர் தலைவராக இருந்தாலும், செயலாளர் பதவிதான் சக்திவாய்ந்தது. அதனை இலக்கு வைத்து சுமந்திரன் செயற்பட்டார். செயலாளரையும், செயற்குழுவையும் தெரிவு செய்ய கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை திருமலையில் பொதுக்குழு கூடியபோது, கட்சி பிளவுபடக் கூடாது என்ற கருத்து பொதுவாக முன்வைக்கப்பட்டது. தலைவராகத் தெரிவான சிறீதரனுக்கும் அது முக்கியமானதாகவே இருந்தது.

கூட்டம் ஆரம்பமாக முன்னர், சிறீதரனை தனியாகச் சந்தித்த சுமந்திரன் கட்சியின் “ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு” எனக் கூறி தன்னுடைய திட்டத்தை வெளியிட்டார். “கட்சியின் செயலாளராக என்னை நியமியுங்கள். கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாக்கலாம். நாம் இருவரும் இணைந்து செயற்படலாம்” என்று தனது திட்டத்தை வெளிப்படுத்தினார் சுமந்திரன். இவ்வாறான ஒரு திட்டத்துடன் சுமந்திரன் வந்தது சிறீதரனுக்கு அதிர்ச்சி. ஒற்றுமை என்ற பெயரில் இது தனக்கு வைக்கப்படும் “பொறி” என்பது புரியாத ஒருவராக சிறீதரன் இருக்கவில்லை.

இதனை நிராகரிப்பதற்கு இரண்டு காரணங்களை சிறீதரன் முன்வைத்தார். “ஒன்று - தலைமைப் பதவிக்கு நீங்கள் என்னுடன் போட்டியிட்டவர். மற்றொரு முக்கியமான பதவிக்கு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# “கூட்டமைப்பு” குறித்து பேச முன் தமிழரசு ஐக்கியப்பட வண்டும்!



## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் செவ்வி

**தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்டமையையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கூறியிருந்தார். இது தொடர்பில் பிரிந்து சென்ற கட்சிகள் சில நிபந்தனைகளை முன்வைத்திருந்தன. இவை குறித்து 5 கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீ தரன் தெரிவு செய்யப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னர் இருந்ததைப் போல பலமான நிலைக்கு கட்டியெழுப்பப்போவதாகக் கூறியிருந் தார். இது குறித்த உங்களுடைய பிரதி பலிப்புக்களையும் நீங்கள் வெளிப்படுத் தியிருந்தீர்கள். இந்த விடயத்தில் என்ன நடைபெறுகின்றது?**

தமிழரசுக் கட்சி முதலில் தமக்குள் ஐக்கியப்படுகின்ற ஒரு சூழலை தோற்று விக்க வேண்டும். எனது சொந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பாரிய பிளவு ஏற்பட்டிருக்கின்றது. தலைவர் தெரிவு இடம்பெற்று, நாங்கள் இணங்கிச் செயற் படப்போகின்றோம் என்று சொன்னதற்குப் பிற்பாடு, அவர்களுடைய மாநாட்டுக்குச் செல் வதற்கு முன்னர் செயலாளர், மற்றும் செயற்குழு வைத் தெரிவு செய்வதில் அவர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதில் சுமந்திரனைப் பொறுத்த வரையில், தனக்கு விசுவாசமான ஒருவரை கிழக்கு மாகாணத்திலிருந்து செயலாளராகத் தெரிவு செய்ய விரும்பினார். ஆனால், சிறீதரன் தனக்கு விசுவாசமான ஒருவரை செயலாளராக்க விரும்பினார். இவை குழப்பத்துக்குள்ளாகி, அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது.

அதனால், என்னைப் பொறுத்தவரையில் கட்சிக்குள் விரிசல் ஏற்பட்டிருக்கின்றது. ஒற்றுமை யின்மை தொடர்ந்தும் நீடித்துக்கொண்டிருக் கின்றது. எனவே இந்த விடயங்கள் தமிழரசுக் கட்சிக்குள் பேசித் தீர்க்கப்பட்டு, அவர்கள் ஒருமித்த ஒரு நிலைக்கு வந்தால் மட்டும்தான் அவர்கள் ஏனையோருடன் பேசுகின்ற ஒரு நிலைமைக்கு, அல்லது நாங்கள் அவர்களுடன் பேசுகின்ற ஒரு நிலைமைக்குப் போக முடியும். அதனால், இதற்கு இப்போதிருக்கக்கூடிய முன்நிபந்தனை - தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய வேறுபாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அவர்கள் ஒற்றுமைப்பட்டுப் பயணிப்பார்களா? அல்லது என்ன செய்வார்கள் என்பதை அவர்கள் தீர்மானித்த பின்னர்தான், நாங்கள் புதிய கூட்டணியை உருவாக்குவதா, அல்லது இருக்கிற கூட்டணியை வலுப்படுத்துவதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

**ஏற்கனவே இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள உருவாக்குவதில் உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருக் கின்றதா?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த 22 வருடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு முதல் 2017 வரையில் அதனைப் பதிவு செய்யுமாறு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாம் செயற்பட்டுவந்த போதிலும்கூட, அதற்கான நட வடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இறுதியாக அதனைப் பதிவு செய்யப்போவதில்லை என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பல ரும் கூறியிருக்கின்றார்கள்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நாங்கள் மாத்திரமல்ல, எமக்கு முன்னதாக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த கஜேந்திரகுமார் வெளியேறியிருக்கின்றார். பின்னர் நாங்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறுதியாக தமிழரசுக் கட்சியும் அதிலிருந்து வெளியேறிவிட்டது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது இப்போது செயற்பாட்டில் இல்லை என்பது யதார்த்தமாகும். இது ஒரு விடயம்.

இரண்டாவதாக, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிலிருந்து வெளிவந்ததற்குப் பின்னர் கடந்த ஜனவரி மாதமளவில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி போன்றவை இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு அமைப்பை உருவாகியிருக்கின்றோம். அது உருவாக்கியதுடன் மட்டுமல்லாமல், அது பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கான யாப்பு ஒன்றும் வரையப்பட்டுள்ளது. இதன் மூலம் அதற்கான ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இல்லாத அனைத்தும் இந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உரு வாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் யாரும் இணைய முடியும் என்பது ஒரு விடயம். தமிழரசுக் கட்சியும் இதில் இணைந்துகொள்ள முடியும். தமிழரசுக் கட்சிக்கு இந்த யாப்பில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், அதனை அவர்கள் திருத்திக்கொள்ளலாம். பெயரில் சிக்கல் இருந்தால், அது தொடர்பாக நாம் கலந்துரையாட முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிதாக அவர்கள் உருவாக்க விரும்பினால், அதற்கும் நாம் தயார். அல்லது ஏற்கனவே இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை செழுமைப்படுத்த அவர்கள் விரும்பினால் அதற்கும் நாம் தயார்.

ஆனால், எல்லோரும் விரும்புவது என்ன வென்றால், இது முன்னர் இருந்தது போலல்லாமல், ஒரு யாப்பின் அடிப்படையில், சரியான முறையில் ஒரு கட்டமைப்பின் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதைத்தான்.

இரண்டாவது விடயம் என்னவென்றால், தமிழரசுக் கட்சி தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கள், சம்பந்தன் ஆகியோர் இருந்த காலத்தைவிட இப்போது மாற்றமடைந்துவிட்டது. தமிழரசுக் கட்சி என்பது 1950 களில் உருவாகிய ஒரு கட்சியாக இருக்கலாம். ஆனால், அந்தக் கட்சியை அப்போது உருவாக்கியவர்களின் கோரிக்கைகள், தேவைகள், காலநிலைகள், சர்வதேச நிலைகள் வேறானவையாக இருக்கலாம். இப்போது அந்த தமிழரசுக் கட்சிக்கு பலம், பலவீனம் என்பன எவ்வாறுள்ளது என்பது வேறு. ஆகவே, காலத்துக்கு ஒவ்வாத கோரிக்கைகளை முன்வைப்பது என்பது என்னைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல.

அதனால், ஒரு சமத்துவமான

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# யானை தாக்குதலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் மக்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக பல இன்னல்களை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர். இது தொடர்ந்தும் இருந்தே வருகிறது. யானை மனிதன் முரண்பாடு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்பட்டாலும் யானை தாக்குதலினால் பல மனித உயிர்கள் பலியாகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பகுதியில் உள்ள ஆயிலியடி, வட்டமடு, செம்பி மோட்டை பகுதியானது விவசாயப் பூமியாகும். இப் பகுதியில் 67 வயதான விவசாயி ஒருவர் 2024.01.21 அன்று மாலை காட்டு யானையின் தாக்குதலால் உயிர் இழந்தார்.

இப்படியாக யானை தாக்குதல் காரணமாக மனித உயிர்கள் பலியாகின்றன.



இப் பகுதியில் முறையான யானை வேலி அமைக்கப்படாமையும் விவசாயிகள் பல துன்பங்களை அனுபவித்து வருவதாக கூறுகின்றனர். வனஜீவராசிகள் திணைக்களம் ஊடான கண்காணிப்பில் உள்ள யானை வேலிகள் முறையானதாக அமைக்கப்படுவதில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தங்களது வயல் நிலங்கள், பயிரினங்களை பாதுகாப்பதற்காக விவசாயிகள் இரவு நேரங்களில் பாதுகாப்புக்காக பல அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

சில வேளைகளில் யானையின் அட்டகாசத்தால் பல பயன் தரும் மரங்கள் ,நெற் செய்கை போன்றன அழிக்கப்பட்டு துவம்சம் செய்யப் படுகின்றன.

குறித்த ஆயிலியடி பகுயியில் மாத்திரம் 2015தொடக்கம் 2024 தற்போது வரை 03 உயிர்கள் யானையின் தாக்குதலினால் காவு கொள்ளப்பட்டுள்ளன. இப் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். நெற் செய்கை பண்ணப்படும் போதும் அதனை பராமரித்து அறுவடை செய்யும் வரை அச்ச சூழ் நிலையில் யானைகளுக்கு பயந்து காலத்தை வயல் நிலங்களில் இரவு வேலைகளில் கழித்து வருகின்றனர்.



உரிய அரசாங்க திணைக்களங்கள் யானை வேலிகளை பராமரிக்கவும் பாதுகாப்பற்ற பகுதிகளுக்கு சீரான தரமான யானை வேலி களை அமைக்கவும் முன்வர வேண்டும். இதற்காக பொறுப்புடன் அவர்கள் செயற்பட வேண்டும் என்பதுடன் மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாக்க சிறப்பு பயிற்சி திட்டங்களையும் முறையான வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டும். காட்டு யானைகள் பல இடங்களில் குப்பை மேட்டுகளை தேடி வருவதும் பனை மரங்கள் உள்ள பகுதிகளை தேடி வருவதாகவும் கூறப்படுகிறது .

இருந்த போதிலும் யானை மனிதன் மோதல் என்ற நிலை காணப்பட்டாலும் பல யானைகள் பல காரணங்களால் உயிரிழக்கின்றன. மின்சார வேலியில் சிக்குதல், பட்டாசு வெடி வெடித்து உயிரிழத்தல் போன்ற காரணங்கள் உட்பட இயற்கை மூலமான உயிரிழப்புக்களும் இடம் பெறுகின்றன. வனஜீவராசிகள் திணைக்களத்தின் அறிக்கையின் படி 2022ம் ஆண்டில் 439 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் 2023 ஜனவரி தொடக்கம் டிசம்பர் 01 வரை 449 யானைகள் உயிரிழந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில் யானை தாக்குதல் தொடர்பாக ஆயிலியடி பகுதியின் இளைஞன் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

"யானை தாக்கம் இங்கு அதிகரித்து உயிர் சேதங்களும் நிலவி வருகின்றது. பரம்பரை பரம்பரையாக நாங்கள் விவசாயமே செய்து வருகின்றோம். யானை வேலி இருக்கின்ற போதும் சீராக இல்லை. வருடா வருடம் யானை தாக்குதல் காரணமாக பல உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. விவசாயத்தை தவிர எங்களுக்கு வேறு தொழில் தெரியாது. அரசாங்கம் மூலமான தீர்வு இல்லை. உயிர் சேதம் இடம் பெற்றே வருகிறது. யானை வேலிகளை பராமரித்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்" என்றார்.




இப்படியாக யானை தாக்குதல் காரணமாக உயிரை பணயம் வைத்து விவசாய நிலத்தை பாதுகாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அப்பாவி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயிலியடி கிராம மக்கள் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயம், கூலித் தொழில் மூலமாக வாழ்வாதாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

"விவசாயம் செய்து வருகிறோம் யானை வேலி சீரில்லை. இதனை சீராக்கி செய்து தாருங்கள் இதனை யாரும் தேடுவாரற்ற நிலையில் உள்ளது இதனை முறையாக சீராக பாதுகாத்து யானை தாக்குதலில் இருந்து பாதுகாத்து தாருங்கள்" என இப் பகுதியின் விவசாயி ஒருவர் தனது ஆதங்கத்தை அன்றைய தினம் யானை தாக்குதலினால் உயிரிழந்தவரின் சம்பவ இடத்தில் வைத்து தெரிவித்தார்.



மனித யானை மோதல் என்பது பல காலா காலமாக இடம் பெறுவதுண்டு. திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் பல இடங்கள் விவசாய செய்கை கொண்ட இயற்கை எழில் கொண்ட இடமாகவும் பல இயற்கை வளங்களை கொண்ட பூமியாக காணப்படுகிறது. திருகோணமலையின் கன்னியா குப்பை மேட்டுப் பகுதி,தம்பலகாமம் ஜெயபுர குப்பை மேட்டுப் பகுதி, கிண்ணியா சின்னத்தோட்டம் குப்பை மேட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் இவ் யானைகள் அதிகமாக நடமாடுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக கொட்டப்படும் கழிவுகளை தேடி யானைகள் படை எடுக்கின்றன. அருகாமையில் உள்ள மக்கள் இக் காட்டு யானையினால் அச்ச சூழ்நிலையில் தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

மக்களை பாதுகாக்க குப்பை மேட்டு கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யக் கூடிய மீள் சுழற்சி மூலமாக உற்பத்திகளை அதிகரிக்க பல திட்டங்கள் உள்ள போதிலும் முறை யான திட்டம் ஊடாக நடை முறைப்படுத் துவதாக தெரியவில்லை.

சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் சூழல் மாசடையாத வண்ணம் கழிவுகளை முகாமை செய்ய வேண்டும். சில வேலைகளில் கழிவுகள் மூலமாக சூழல் மாசடைவு ஏற்பட்டு மக்களை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.



எனவே தான் யானை தாக்குதலை குறைக்கவும் முறையான யானை வேலிகளை அமைக்கவும் உரியவர்கள் முன்வர வேண்டும் என்பதே மக்களின் ஏகோபித்த எதிர்பார்பாகும்.

• • •

# சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஸ்டிப்பதற்கு இளையோர் திரண்டு ஆதரவு வழங்கவேண்டும்

மட்டு.நகரான்

இலங்கையின் 48வது சுதந்திர தினம் எதிர்வரும் 04ஆம் திகதி அனுஸ்டிக்கப்படவுள்ளது. இலங்கையின் சுதந்திர தினத்தை வடகிழக்கு தமிழர்கள் கரிநாளாக அனுஸ்டிப்பதற்கும் அன்றைய தினத்தில் இலங்கை சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமது நியாயமான குரலை வெளிப்படுத்துவற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையானது காலனித்துவ ஆட்சி யிலிருந்து விடுபட்ட காலம் தொடக்கம் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் முன்னெடுக் கப்பட்டே வருகின்றன. தமிழர்கள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்கும் அத்து மீறல்களுக்கும் எதிராக தமிழர்கள் அகிம்சை ரீதியாக போராடினார்கள் அடக்கப்பட்டார்கள். ஆயுத ரீதியான போராடினார்கள் மௌனிக்கப் பட்டார்கள். தற்போது இராஜதந்திர ரீதியில் போராட்டத்தினை முன்னெடுத்துள்ள நிலையிலும் அதனையும் மௌனிக்க செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது.



இந்த நாட்டில் தமிழ் இனம் வாழ்வதற்கு தகுதியற்றவர்களாக பார்க்கும் சிங்கள சமூகம் இந்த நாட்டில் தமிழர்களுக்கான நீதியையே சுதந்திரத்தையோ வழங்குமா என்பது கேள்விக் குறியாகியுள்ள நிலையில் இந்த நாட்டில் தமிழ் இனமும் ஒரு சுதந்திர இனம் அவர்கள் இந்த நாட்டின் பூர்வீக குடிகள் என்ற அடிப்படையில் தமிழர்களுக்கான அதிகாரங்களை வழங்கி தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன் முறைகளுக்கான நீதியை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக தமிழர்கள் மத்தி யிலிருந்து எழுந்துவருகின்றது.

வடக்கு கிழக்கு தமிழர்கள் தாயகம்.தமது தாயகத்தில் தங்களை தாங்களே ஆளும் நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் நிறுத் தப்பட்டு,காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட்டு தமிழர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும். வடகிழக்கில் கடத்தப்பட்டு காணாமல் ஆக் கப்பட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான நீதிவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 04ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி வடகிக்கு பல் கலைக்கழக மாணவர்கள், வலிந்துகாணாமல் ஆக் கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மாபெரும் கவன ஈர்ப்பு பேரணி நடத்தப்படவுள்ளது.



.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இந்த பேரணியானது நடைபெறவுள்ளதுடன் இந்த போராட்டத்திற்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தினை வெறுமனே கடந்த கால போராட்டங்களை போன்று அல்லாமல் இந்த போராட்டம் ஊடாக சர்வதேசத்தின் கதவினை தட்டுவதற்கான போராட்டமாக நடைபெறவேண்டும் என்ற கோரிக்கைகள் இன்று கிழக்கிலிருந்து வலுப்பெற்றுவருகின்றது.

மட்டக்களப்பில் இந்த இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள அதேநேரம் கிழக்கு மாகாண ஆளுனரினால் சிங்கள சுதந்திர தினத்தை மட்டக்களப்பில் களியாட்டங்களுடன் முன்னெடுப்பதற்கான முன்னெடுப்புகள் நடை பெற்றுவருகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி முன்னெடுக்கும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற வகையிலான குரல்கள் தொடர்ச்சியாக ஒலிக்கும் நிலைமையினை காணமுடிகின்றது.இந்த நிலைமையில் இந்த போராட்டம் குறித்து எங்களிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை இங்கு தொகுத்துவழங்குகின்றறோம்.

### சிவஸ்ரீ கணேச லோகநாதன் குருக்கள்,
**கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம்,**

இந்த நாட்டில் காலம்காலமாக தமிழர்கள் அடக்கப்பட்டு,ஒடுக்கப்பட்டே வருகின்றனர். தமிழர்கள் தமக்கான கோரிக்கைகளையும் உரிமை களையும் கோரும்போதேல்லாம் அடக்குமுறை களை முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் இங்கு ஆட்சி செய்தவர்கள் தமிழர்களை ஏமாற்றியே வருகின்றார்கள். இன்றும் தமிழர்கள் ஏமாற்றப் படுகின்றனர். கடந்த காலத்தில் தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டார்கள், ஆயிரக்கணக்கில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். இவற்றிற்கு எல்லாம் நீதிகேட்டு போராடும் இன




மாகவே நாங்கள் இருந்துவருகின்றோம்.

எங்களுக்கான உரிமைகள் மறுக்கப்படு கின்றது.இவற்றினை நாங்கள் உரத்து கேட்க வேண்டிய நிலையுள்ளது. அதனால் எதிர்வரும் 04ஆம் திகதி முன்னெடுக்கும் போராட்டத்திற்கு நாங்கள் முழுமையான ஆதரவினை வழங்குவோம். அனைவரும் இதற்கு ஆதரவு வழங்கி எங்களது குரலை வெளிப்படுத்தவேண்டும்.சர்வதேசத்திற்கு எங்களது சத்தம் கேட்கவேண்டும் என்றார்.

### கிருஸ்ணபிள்ளை சேயோன்,
**தலைவர், வாலிப முன்னணி ,வடகிழக்கு மாகாணம்,**

இலங்கை சுதந்திரம் அடைந்த நாட்களில் இருந்து குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்தின் மீதான அடக்குமுறைகள் குறைந்தபாடில்லை. எம் இனத்தின் மீதான வன்முறைகளும் பல்வேறு காலங்களில் நடைபெற்றது. இந்த நாட்டிலேயே ஒரு அடிமைப்பட்ட சமூகமாக சிங்கள பேரினவாதத்தால் பார்க்கின்ற நிலைமை இருக்கின்ற இந்த நேரத்தில் ஒவ்வொரு சுதந்திர தினத்திற்கேனும் எங்களுடைய தமிழ் பேசுகின்ற சமூகம் நிம்மதியாக வாழ வேண்டுமென்ற நிம்மதி பெருமூச்சு எதிர்பார்த்து இருக்கின்ற நேரத்தில் எந்த சுதந்திர தினமும் இதுவரை அந்த மனநிலையை ஏற்படுத்திவிடவில்லை.

அதேபோன்று எதிர்வரும் இலங்கையின் சுதந்திர தின நாளில் தமிழ் மக்கள் அதனை ஒரு கறுப்பு சுதந்திர தினமாக பிரகடனப்படுத்தி போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளனர்இந்த நாட்டில் பல்வேறு அசாதாரண சூழ்நிலைகள் ஏற்பட்ட போது அதிகமாக பாதிக்கப்பட்டது தமிழ் சமூகமே. அதில் இன்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தங்களுடைய தந்தையை தேடிக்கொண்டு தங்களுடைய கணவன்மாரை தேடிக்கொண்டு தங்களுடைய பிள்ளைகளை தேடிக்கொண்டு இருக்கின்றார்களா இல்லையா இறந்து விட்டார்களா என்கின்ற எந்த செய்தியும் இல்லாமல் தினம் தினம் இயக்கத்தில் வாழ்ந்து




கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கான நீதி கூட இன்னமும் வழங்கப்படவில்லை. இறுதி யுத்தம் நடை பெற்ற காலப்பகுதியில் நடாத்தப்பட்ட படு கொலைகளுக்கு நீதியான தீர்ப்பு வழங்கப் படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு இந்த நாட்டினுடைய சுதந்திரம் என்கின்ற அந்த கோஷத்தை நாங்கள் தமிழ் பேசுகின்ற சமூகம் முன்வைக்க முடியும் என்றார்.

### தர்மலிங்கம் சுரேஸ்,
**தேசிய அமைப்பாளர், தமிழ் தேசிய மக்கள் முன்னணி,**

தமிழர் தாயகம் இந்த விடயத்தில் அந்த நாளினை ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் வடகிழக்கு பூராக கறுப்பு பட்டி அணிந்து சர்வதேச சமூகத்திற்கு




இன்னும் இந்த இலங்கை தீவில் இருக்கும் ஆட்சியாளர்களினால் தொடர்ந்தும் நாங்கள் அடிமைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றோம்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# கறுப்புத் தோல் போர்த்திய வெள்ளையர்கள்

**துரைசாமி நடராஜா**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் பெப்ரவரி நான்காம் திகதியாகும். இத் தினத்தில் இலங்கை சுதந்திரத்தை கொண்டாடுகின்ற போதும் இலங்கையின் சிறுபான்மையினருக்கு இது எந்தளவுக்கு சாத்தியமாகியுள்ளது என்பது குறித்து சிந்திக்கத் தோன்றுகின்றது. சுதந்திரத்தின் பின்னர் சிறுபான்மையினர் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் உள்ளாகியுள்ள நிலையில் இதனால் இவர்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

சிறுபான்மையினர் வரிசையில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் நெருக்கீடுகள் ஒருபடி அதிகமாகவே காணப்படுகின்றன.இனவாத அரசியல் சாக்கடைக்குள் சிக்குண்டு அல்லல்படும் இம் மக்களின் அவலவாழ்க்கை சுதந்திரத்திற்குப் பின்னரும் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.



இலங்கை 1948 ம் ஆண்டு சுதந்திரமடைந்தது.எனினும் அந்த சுதந்திரம் அர்த்தமுள்ளதாக இல்லை. மனப்பாங்கு ரீதியான சுதந்திரம் ஈட்டப்படாதவரை ஒரு நாடு சுதந்திரத்தின் ஆரோக்கியமான அறுவடையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. இலங்கையில் சுதந்திர ஆட்சியினை பொறுப்பேற்ற அரசியல் முன்னோடிகள் பிரித்தானிய பிடியிலிருந்து விடுதலை பெற்றதாக கூறிக் கொண்டாலும் அந்த வெள்ளை எஜமானரின் கலாசாரத்தினை பெருமையோடு அணைத்துக் கொண்டதோடு கறுப்புத்தோல் போர்த்திய வெள்ளையர்களாகவும் காட்சியளித்தார்கள் என்பதே உண்மையாகும்.



இலங்கையின் சுதந்திரம் என்பது அதன் காலனித்துவ வரலாற்றை தவறான முறையில் கணக்கிட்டுக் கொண்டமையாகும். சிங்களத்துவ உணர்வு காலனித்துவ ஆட்சிமுறையின் அடிப்படையான பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரித்தானிய பாராளுமன்ற முன்மாதிரியை திரிகரண சுத்தியாக உள்வாங்கிக் கொண்டது. இதனால் பின்காலனித்துவ காலத்தில் தென்னிலங்கையின் பிரதான அரசியல் போக்கு அந்த காலனித்துவ கருத்து நிலையை சுதேசிய அரசியல் கோட்பாடாக மாற்ற முனைந்தது. இதனால் இலங்கையின் பின்காலனித்துவ வரலாறு காலனித்துவ கருத்து நிலையின் அடிப்படையிலேயே கால்கோள் செய்யப்பட்டிருக்கின்றது.

இதேவேளை தேசிய சுதந்திரம் என்பதை இன்றுவரை இலங்கை மக்கள் பூரணமாக அனுபவிக்கவில்லை. தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படை மனித உரிமைப் பிரச்சினைகளும், அனைத்து மக்களையும் சமமாக பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் செயற்பாடுகளும் இலங்கை இன்னும் சுதந்திரம் அடையவில்லை என்பதையே அடையாளப்படுத்துகின்றது. இந்நிலையில் 21 வது நூற்றாண்டிலாவது ஒருங்கிணைப்பு தேசியம் ஏற்படுமா? என்றும் முக்கியஸ்தர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

### தழும்புகள்

இலங்கையின் சுதந்திரம் சிறுபான்மையினருக்கு சாத்தியமாகாத நிலையில் அவர்கள் பல்வேறு துயரங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். சுதந்திரத்திற்கு முன்னர் இருந்த அதே கெடுபிடிகள், நெருக்கீடுகள் இன்னும் முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இனவாதம், ஒதுக்கல் நிலைமைகள், மாற்றாந்தாய் மனப்பான்மை என்பன விரிசல்களுக்கு வலுசேர்த்த நிலையில் இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கும் அது உந்துசக்தியானது. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இலங்கை தேசத்தின் தேகத்தில் ஆழமாக பதிந்துள்ளன. சர்வதேசம் இலங்கையின் மீது சந்தேகப் பார்வையினை செலுத்துவதற்கும் இது வாய்ப்பளித்ததோடு இலங்கையின் அபிவிருத்தியும் தடைப்பட்டது. இவையெல்லாம் சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வடுக்களாகும்.



இதேவேளை இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் எதிர்கொண்ட சவால்களுக்கும் ஒருபோதும் குறைவில்லை. 1947 இல் டொமினியன் அந்தஸ்து கிடைத்தபோது அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த எஸ். டி.சேனநாயக்காவின் குறிக்கோளாக இருந்தது, இலங்கைபிரஜைகள்என்றவட்டத்தினுள்இந்திய வம்சாவளி தமிழர்களை அகற்றுவதேயாகும். 1948 இல் இதேவிடயம் குறித்து மேலுமொரு சட்டம் இயற்றப்பட்டது. அந்த சட்டவாக்கம் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு எதிரானது என்பது மாத்திரமல்லாமல் இலங்கைத் தமிழர்களையும் இலங்கையில் எவ்வாறு நடத்தப்பட போகின்றார்கள் என்பதற்கான ஒரு அறிவித்தல் மணியே என்று இலங்கை தமிழ் மக்களுள் சிலர் கருதியமையாலேயே 1949 இல் இலங்கை தமிழரசுக் கட்சி தோன்றியதாக அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

1947 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் இந்திய வம்சாவளி மக்களின் ஆதிக்கநிலை ஐக்கிய தேசியக் கட்சியின் கண்களை உறுத்தியது. இந்திய வம்சாவளி சமூகம் மேலெழும்புவதனை அக்கட்சி விரும்பவில்லை. இதனால் பொறாமை கொண்ட அக்கட்சி இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பவற்றை பறித்தெடுத்து அம்மக்களை சகல துறைகளிலும் ஓரம்கட்டியது. இதன் காரணமாக அம்மக்களின் வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டதுடன் அரசதுறை தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டது. அரசியலில் அநாதைகளாக அவர்கள் இருந்த நிலையில் அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.



அரச உதவிகளில் அம்மக்கள் புறந்தள்ளப்பட்ட ஒரு நிலையே காணப்பட்டது. 1948 ம் ஆண்டில் பறித்தெடுத்த பிரசாவுரிமையையும் வாக்குரிமையையும் 1988 ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி மீளவும் இந்திய வம்சாவளி மக்களுக்கு பெற்றுக் கொடுத்து தனது பாவத்துக்கு பிராயச்சித்தம் தேடிக் கொண்டது. இதன் பின்னர் இந்திய வம்சாவளி மக்கள் படிப்படியாக தேசிய அரசியல் நீரோட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டனர்.

### தொடரும் வன்செயல்கள்

உள்ளூராட்சி மன்றங்கள்,மாகாண சபை, பாராளுமன்றம் என்று இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் விரிவுபடுத்தப்பட்டது.இதன் காரணமாக அரச அபிவிருத்திகள் பிந்திய காலப்பகுதியில் இந்திய வம்சாவளி மக்கள் என்று கூறப்படும் மலையக மக்களை வந்தடையத் தொடங்கியது என்ற போதும் இவ்வுதவிகள் பூரணத்துவம் மிக்கதாக இல்லை.

சுதந்திர இலங்கையின் பின்னர் இனவாத முன்னெடுப்புக்கள் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டன. 'சிறுபான்மையினருக்கு அள்ளிக் கொடுக்காவிட்டாலும் கிள்ளிக் கொடுக்கவும்' இனவாதிகள் விரும்பவில்லை. பட்டியல் அடிப்படையில் செயற்பட்ட இனவாத சிந்தனையாளர்கள் இம்மக்களை ஓரம் கட்டுவதிலேயே குறியாக இருந்தனர். காலத்துக்கு காலம் இலங்கையில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் 1983 ம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல் அனைத்துக்கும் முத்தாய்ப்பாக அமைந்தது. இவ்வன்செயல் நிலைமைகள் காரணமாக பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதோடு உடைமைகளுக்கு சேதமும் ஏற்பட்டது. தமிழ் மக்களின் பலகடைகள் தீக்கிரையாக்கப்பட்டதோடு அவர்களின் பொருட்களும் கொள்ளையிடப்பட்டன. வன்செயல்களின் தாக்கம் காரணமாக சிலர் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்தனர். இத்தகைய இடம்பெயர்வுகளும் இனவாதிகளுக்கு சாதகமாகின.

மலையக மக்கள் பல்வேறு உரிமைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, சமூக நிலைமைகள் எனப் பல்வேறு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# அயோத்தி இராமர் கோவில் திறப்பு விழாவும் அரசியல் பின்னணியும்



அயோத்தியில் ராமர் ஆலய பிரதிஷ்டை கோலாகலமாக நடந்து முடிந்திருக்கிற நிலையில், முறைப்படி படித்து முதுகலைப்பட்டம் பெற்ற தமிழ் மாணவன் என்ற தகுதியோடு, 3 உண்மைகளை உரக்கப் பேசவேண்டியிருக்கிறது.

**1. இராமாயணம் என்கிற ராமனின் கதை, முழுக்க முழுக்கக் கட்டுக்கதை.**

**2. அந்தக் கதையிலேயே கூட உன்னதமான பாத்திரம் ராமன் அல்ல! அது பரதன்.**

**3. மற்ற சில காப்பியங்களைப் போல், இராமாயணம் நேர்மறைக் காப்பியமல்ல! எதிர்மறைக் காப்பியம். அதிலும் குறிப்பாக சிவநெறிச் செல்வன் இராவணனை ஸ்திரி லோலனாகக் காட்டி சைவப் பிரிவை இழிவுபடுத்துகிற காப்பியம்.**

இராமாயணம் கதைதான் என்பதற்கான அகச் சான்றுகள், இரமாயணத்திலேயே இருக்கின்றன. இராவணனுக்கு பத்துத் தலை இருக்கிறது. மாரீசன் பொன் மான் ஆகிறான். மருந்துக்குப் பதிலாக ஒரு மலையையே தூக்கி வருகிறான் அனுமன். கடலுக்குக் குறுக்கே பாலம் அமைக்கின்றன அணில்கள். ஒரு கல் அகலிகை ஆகிறது. எல்லாமே Fantasy யதார்த்தத்திற்கு முரணானவை.

கதை என்பதால் தான் இராமாயணத்தை தன் விருப்பப்படி கம்பன் மாற்ற முடிந்தது. சீதையை இராவணன் தோள் மீது வைத்துத் தூக்கிச் சென்றதாய் வால்மீகி எழுத, மாற்றி எழுதுகிறார் கம்பன். அவள் கற்பின் கனல். தொட்டவன் கெட்டான். இராவணன் அவளைத் தொட்டிருந்தால் அந்தக் கணமே சாம்பலாகி இருப்பான். அதனால் அவள் இருந்த பர்ணசாலையையே பெயர்த்துத் தூக்கிச் செல்கிறான். கம்பனின் இராவணன். அது சீதையையும் கௌரவப்படுத்துகிறது. தமிழ்ப் பண்பாட்டையும் காப்பாற்றுகிறது. வரலாறாக இருந்தால். இப்படியெல்லாம் மனம் போன போக்கில் மாற்றியிருக்க கம்பனால் முடிந்திருக்காது.

இராமாயணம் என்றே அறியப்பட்டாலும், அந்தக் காவியத்தில், மற்றெல்லாப் பாத்திரங்களையும் காட்டிலும் உன்னதமான கதாபாத்திரம் பரதன். தாயின் பேராசைக்கும், தந்தையின் ஆணைக்கும் அவன் கட்டுப்படவில்லை. மனசாட்சிக்குக் கட்டுப்படுகிறான். தங்கத் தட்டில் வைத்துத் தரப்படும் வைர கிரீடத்தை தலையில் வைத்துக் கொண்டு selfie எடுத்து, அதை whats appஇல் அனுப்பிக் கொண்டிருக்கவில்லை பரதன். அது தமயனுக்கான கிரீடம். எனவே தாங்க மறுக்கிறான். தேடி வந்த அரச பதவியை இடது காலால் எட்டி உதைக்கிறான். திரும்பி வா என்று அண்ணனை அழைக்க கானகத்துக்கு வருகிறான். அவன் தான் அந்தக் காப்பியத்தின் உன்னதமான, உண்மையான அவதார புருஷன்.

பரதனைப் போலவே அரிதினும் அரிதான இன்னொரு கதாபாத்திரம் அனுமன். அடுத்தவன் மனைவியைத் தேடிப் பிடிக்க `றிஸ்க்' எடுத்து இலங்கைக்கு செல்பவன். IPKF செய்ததைத் தான் அனுமனும் இலங்கையில் செய்தானென்றாலும், அது 2 இலட்சம் வானரங்களுடன் செல்லாமல் ONE MAN ARMYயாக அனுமன் செய்த சாகசம்.

இலங்கைக்கு போன பிறகும், சீதையைத் தேடிப் பிடித்த பிறகும், அடுத்தவன் மனைவியின் முகம் பார்க்கத் தயங்கி, அவள் பாதத்தைப் பார்க்கிறது பராக்கிரம் பொருந்திய அந்த வானரம்.



புகழேந்தி தங்கராஜ்

"அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக
ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்." என்கிறான் கம்பன்.

உன்னதமான பாத்திரங்களில் மூன்றாமிடத்தை யாவது ராமனுக்குக் தரலாமென்றால், அவனை விடச் சிறந்த படைப்பான சீதை அந்த இடத்தைப் பிடிக்கிறாள்.

தந்தையின் மாளிகையிலிருந்து கணவனின் மாளிகைக்குள் நுழைபவள், கொண்டு வந்த சீதனங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், கணவனின் அடியொற்றி கானகத்துக்குள் நுழைகிறாள். ஒப்பிட்டுப் பார்க்கையில், அவள் ஒரு மதிவதனி. உடுத்திய சேலையுடன் கணவனைத் தொடர்பவள். அப்படியொரு அதி அற்புதமான படைப்பைத்தான், தீக்குளிக்கச் சொல்கிறான் ராமன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஹிட்லர்களுக்கும், முசோனிகளுக்கும், ஜெயவர்த்தனகளுக்கும், ராஜபக்சக்களுக்கும் நிகரான வெறுப்பரசியல்ல. இராமாயணத்தின் அஸ்திவரமாக்குகிறான் வால்மீகி. ஏகபத்தினி விரதனானராமன்வைணவன். அடுத்தவன் மனைவியை அடைய விரும்பும் இராவணன் சிவப்பிரியன். அவனோடு நின்று விடாமல், அந்த சிவபக்தனின் சகோதரியையும் அகௌரவப்படுத்துகிறது. இராமாயணம்.

வேறொரு பெண்ணின் கணவனான ராமனை எப்படியாவது அடைய நினைக்கிறாளாம் சூர்ப்பனகை. இராமாயணம் எப்படியொரு சைவ வெறுப்புணர்வைக் கக்குகிறது என்பதற்கு, அந்தக் கதை நெடுக சான்று இருக்கிறது. நீறு அணிந்தவன் அயோக்கியன், நாடதாரி தான் யோக்கியன் என்பது அது சொல்லும் நீதி.

வெறுப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நச்சுச் சிந்தனைகளை உள்ளதை உள்ளபடி சொன்னால் எடுபடாது. அதனால் தான் அதற்கான காவிய சோடனைகளுடன், கதாபாத்திரங்களுடன், கதையமைப்புடன் அந்த வெறுப்புத் திணிப்பில் வெற்றி பெறுகிறான் வால்மீகி. வால்மீகி விட்ட பிழைகளைச் சில இடங்களில் சரி செய்ய முடிந்திருக்கிறது கம்பனால். ஆனால் அஸ்திவாரத்தையே மாற்றிவிட முடியுமா என்ன! அப்படியொரு தவறான அஸ்திபாரத்தின் மீது தான் கோட்டை கட்டப் பார்க்கிறார் இந்தியாவின் பிரதமர்.

"இந்தியாவிற்குத் தேவை தண்ணீர் தான்" என்று 1850 இலேயே குரல் கொடுத்த பிரிட்டிஷ் பாணப் பொறியாளர் ஆர்தக் காட்டன் அப்போது அவர் கிழக்கிந்திய நிறுவனத்தின் அதிகாரி. கரிகாலன் கட்டிய கல்லணையைக் கண்டு வியந்து 'Grand Anaicut' என்று பெயர் வைத்தவர் அவர்தான். இந்தியா முழுவதிலும் ஓடும் நதிகளை இணைக்க வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அதை ஏற்கவில்லை.

எது தேவையோ அதைக் கொடுக்காமல், சாமானிய மக்களுக்குத் தேவையில்லாதவற்றை அவர்கள் மீது திணிப்பது கிழக்கிந்திய கம்பெனியில் தொடங்கி, (ம்ம்ம்ம்ம்ம) நீடிக்கிறது. ராமர் கோயிலைக் கட்டி விட்டால் விலைவாசி குறைந்து விடுமென்று நினைக்கிறாரா? வேலை வாய்ப்புகள் அதிகரித்துவிடும் என்று நினைக்கிறரா? தெரியவில்லை. நாடு முழுக்க ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் என்று பல்வேறு இடங்களில் பிரமாண்டமான தேசியக் கொடியைப் பறக்க விட்டது முதல் ராமர் கோயில் திறப்பு வரை தேவையற்ற நடவடிக்கைகளே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கொடிக் கலாச்சாரத்தைப் பர்க்கிற போதெல்லாம், ஹிட்லர் காலத்தில் நாசிகளின் கொடிகள் ஊர்வலம் வரும் வரலாறு தான் நினைவுக்கு வருகிறது.

ராமர் தான் இந்தியாவின் சட்டம் என்கின்ற உளறல் கேட்கிற போது வீண் சந்தேகத்தின் நிழல் எவர்மீது படுகிறதோ அந்த அப்பாவிப் பெண்களையெல்லாம் தீக்குளிக்கச் சொல்வார்களோ என்று பயமாயிருக்கிறது. ராமனின் கௌரவத்தைக் காப்பாற்ற சீதை அக்கினிப் பிரவேசம் மேற்கொண்ட கொடுமையை சாடி நவீன தமிழிலக்கியச் சிற்பி புதுமைப்பித்தன் 100 ஆண்டுகள் முன் எழுதிய 'சாபவிமோசனம்' சிறுகதை இன்றோ நேற்றோ எழுதியதைப்போல புரிய எடுப்பது நடையோடு திகழ்கிறது.

சாப விமோசனத்தின் கதை படிக்கிற எவரையும் திடுக்கிடச் செய்வது. கணவனின் சாபத்தால் கல்லான அகலிகை, ராமனின் பாதம் பட்ட தூசு பட்டு மீண்டும் அகலிகை ஆகிறாள். உண்மையில் அது ஒரு மறுபிறப்பு. அது அவளுக்கு ராமன் கொடுத்த வாழ்க்கை. அந்த ராமன் தான் மனைவியை அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்னது. அகலிகையை அதிர்ச்சிக்குள்காக்குகிறது. அந்தச் செய்தி உண்மையா என்று சீதையிடம் கேட்கிறாள். ராமன் தான் அப்படிச் சொன்னானா என்கிறாள் சீதை. "அவன் அப்படிச் சொன்னான்" என்று சொல்ல, கோபம் கொந்தளிக்கும் அகலிகை மீண்டும் கல்லாகி விடுகிறாள்.

புதுமைப்பித்தன் என்கிற நேர்மையான, ஆழ்ந்த புலமை கொண்ட கோபக்காரனின் வீரியம் மிக்க பேனா எழுதிய வலிமிகும் வார்த்தைகள் இவை. அவனுக்கிருந்த அதே கோபத்தோடு தான் இதை எழுதுகிறேன்.

எந்த விதத்திலும் ஒரு முன்னுதாரணமாக இருக்க முடியாத ராமனைத்தான், இந்தியாவின்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## கறுப்புத் தோல்... தொடர்ச்சி ...

விடயங்களிலும் இம்மக்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணவில்லை. பெருந்தோட்டப் பகுதிகளில் வைத்திய வசதிகள் உரிய வாறு இல்லாதுள்ளன.தோட்டப்புற வைத்திய சாலைகளில் தகைமை பெற்ற எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் இல்லாத நிலையில் மருத்துவ உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் நோயாளிகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். பெருந்தோட்டப்புற வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் கடந்தகாலத்தில் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இந்நடவடிக்கை மந்தகதியிலேயே முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஒரு சில வைத்தியசாலைகளையே அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இன்னும் அநேகமான வைத்தியசாலைகள் பலவித வளப்பற்றாக்குறை மற்றும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றன. எனவே இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் கூட பெருந்தோட்ட சுகாதார மருத்துவ நடவடிக்கைகளில் ஒரு முன்னேற்றமும் இல்லை.

### பொருளாதார சுதந்திரமின்மை

மலையக பாடசாலைகள் இன்னும் கல்வித் துறையில் முன்செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. அண்மைய தகவலொன்றின்படி பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாதோர் 12.2 வீதமாகுமென்று கண்டறியப்பட்டுள்ளது. இது நகரம், கிராமம் என்பவற்றைக் காட்டிலும் அதிகமாகும். இதேவேளை ஐந்தாம் தரம் வரை படித்தோர் வீதம் பெருந்தோட்டத்துறையில் 42 ஆகும் அதேவேளை கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரத்தில் 4.09 வீதமானவர்களும், க.பொ.த.உயர்தரத்தில் 2.2 வீதமானவர்களும் சித்திபெற்றுள்ளனர். இத்தொகையில் மேலும் அதிகரிப்பினை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. மலையக பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி விருத்தி பெற்றுள்ள அதேவேளை உயர்கல்வித்துறையில் இன்னும் அதிகளவில் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.எனவே இதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுத்துதல் வேண்டும்.

மலையக பெருந்தோட்ட பாடசாலைகளில் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அண்மைகாலமாக அதிகரித்து காணப்படுகின்றது.இதில் பல்வேறு காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. போக்குவரத்து சீர்கேடு, வறுமை, கற்றல் ஈடுபாடின்மை, நோய்கள், விசேட தேவை நிலைமைகள் எனப்பலவும் இடைவிலகலுக்கு காரணமாக அமைந்துள்ளது. இதனிடையே இவற்றை கட்டுப்படுத்தி கல்வியில் அபிவிருத்தியை மலையகத்தில் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். சுதந்திர இலங்கையில் மலையக சமூகம் கல்விமையச் சமூகமாக விளங்க வேண்டும். அவ்வாறு விளங்குகின்றபோதுதான் இம்மக்களின் தேசிய நீரோட்டக் கனவு துரிதப்படுதப்படும் என்பதோடு மேலும் பல சாதக விளைவுகளுக்கும் இது வித்திடுவதாக அமையும்.

மலையக மக்கள் மாதச்சம்பளம் இல்லாத நிலையில் இன்னும் நாட்கூலிகளாக வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றனர். உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொள்வதென்பது இவர்களுக்கு கானல் நீராகவுள்ளது. இவர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதில் ஆட்சியாளர்களும் கம்பனியினரும் இழுத்தடிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இம்மக்களின் பொருளாதார சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. மாற்றுத் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் தேயிலைத் தொழிற்றுறையையே நம்பிவாழும் இம்மக்களுக்கு நியாயமான சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் மேலதிக வருவாயை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கும் பொருட்டு தோட்டப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்காக தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். பெருந்தோட்டப் பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் ஹெக்டேர் தரிசு நிலங்கள் காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சுயநலவாத இருப்பு

இதுபோன்றே தொழிலாளர்கள் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை இல்லாதுள்ள நிலையில் இவற்றை பெற்றுக் கொடுக்க போவதாக அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருகின்றது. இவ்வாக்குறுதிகள் அனைத்தும் ஏட்டுச் சுரைக்காய் ஆகியுள்ளதனை கடந்தகால வரலாறுகள் நிரூபித்து வருகின்றன. இந்நிலையில் வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறவேண்டும். இதற்கான அழுத்தத்தை மலையக அரசியல்வாதிகள் அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும். இந்நிலையில் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோதும் மலையக மக்கள் பல்வேறு உரிமைகளையும் பெற்றுக் கொள்ளாத ஒரு நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பதே கசப்பான உண்மையாகும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 76 ஆண்டுகள் ஆகியுள்ளபோதும் இதன் பயன்கள் உரியவாறு பெற்றுக் கொள்ளப்படவில்லை. நாட்டின் சுதந்திரத்துக்காக 'இலங்கையர்' என்ற ரீதியில் ஒன்றுபட்டு குரல் கொடுத்தவர்கள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் தமக்குள்ளே முரண்பட்டுக் கொண்ட வரலாறுகளே காணப்படுகின்றன. இது ஒரு துர்பாக்கிய நிலை என்றுதான் கூறவேண்டும்.அரசியல்வாதிகள் தமது சுயநலவாத இருப்பினை தக்கவைத்துக் கொள்ளமக்களைபலிக்கடாவாக்கிவருகின்றனர். இந்த கறைபடிந்த அத்தியாயத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.

சுதந்திரத்தின்உண்மையானஅர்த்தத்தினை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து இனங்களும் சமமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கான உரிமைகளை வழங்க ஆட்சியாளர்கள் முன்வருதல் வேண்டும். இலங்கையின் சுதந்திரகால அரசியல் சமூகப் பின்னணியில் நாம் விளங்கிக் கொள்வது இலங்கை வர்க்க அடுக்கமைவானது ஒன்றை ஒன்று சுரண்டியும், மேலாதிக்கம் செலுத்தியும் வந்தபோது அந்த சுரண்டலை தொடர்ச்சியாக பேணவும் அரசியல் அதிகாரத்தை தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு இனவாத வழி காட்டப்பட்டது.

இதுவரை இருந்த அரசியல்வாதிகள் இம்மக்களுக்கு அவ்வாறானதோர் வழியையே காட்டிச் சென்றனர். ஆனால் மக்கள் தொடர்ந்து பொருளாதார நலன்களுக்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இலங்கை மக்களாகிய நாம் பொருளாதார சமத்துவத்தை என்று பெறுகின்றோமோ அன்றே இனவாத சர்ச்சைகளில் இருந்து மீண்டு உண்மைச் சுதந்திரத்தை பெற்றவர்களாவோம் என்று புத்திஜீவிகள் வலியுறுத்துகின்றனர்.

இலங்கை பல்லின மக்களும் வாழும் ஒரு நாடாகும். இங்கு எந்தவொரு இனமும் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்த முடியாது. அவ்வாறு அடிபணிந்து நடக்க வேண்டிய அவசியமும் கிடையாது.எனவே சகல இனத்தவர்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப் பட்ட சுதந்திர நாடாக இலங்கை மிளிர வேண்டும்.

• • •

## சுதந்திரதின ... தொடர்ச்சி ...

எமது மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. தமிழர்கள் இந்த தீவிலே வாழ்கின்ற சிங்களவர்கள் போன்று சுயநிர்ணய உரிமையோடு சம உரிமையோடு வாழக்கூடிய சூழல் இன்னும் உருவாகவில்லை. ஆகவே எங்களுடைய மக்களின் அவல நிலையினை வெளிப்படுத்துவது வழமை.

இந்த கறுப்பு தின போராட்டங்களுக்கு நிச்சயமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி நாங்கள் நிச்சயமாக எங்களுடைய ஆதரவினை வழங்குவோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுப்பதற்கான இந்த போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை வழங்கி நிச்சயமாக அந்த போராட்டத்தை எழுச்சி பெறச் செய்வோம்.

**கே.சோபனன்,**
***தலைவர், மட்டக்களப்பு மாவட்டம்,***

இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணி, அன்பை முதன்மைபடுத்தி கடவுள் கொள்கையை நிராகரிக்கும் பௌத்த மதத்தை சேர்ந்த துறவிகள் கூட அழுக்க குழுவாக இருந்து சிறுபான்மையினரான தமிழர்களின் உரிமைகளை பறிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் நில அபகரிப்பு தொல்லியல் என்ற போர்வையில் தொடர்கின்றமையும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தமிழர்தாயகத்தில் தொடர்ந்து இடம்பெறுவதும் இந்த நாட்டிலே சிறுபான்மையினர் அனுபவிக்கும் துயரமாகும், அத்தோடு தங்களது உறவுகளை தொலைத்து விட்டு தாய்மார் கண்ணீரோடு அலைகிறார்கள் இவர்களுக்கு எந்த தீர்வுகளும் இதுவரை இல்லை,மயிலத்தமடு மாதவணை பதிகளில் பண்ணையாளர்கள் மாடுகளை பராமரிக்க முடியாதவாறு மேய்ச்சல் தரைகள் அபகரிக்கபட்டுள்ளன இன்று நூற்றுக்கணக்கான நாளாக வீதியோரமாய் பண்ணையாளர்கள் நியாயம் கேட்டு போராடுகிறார்கள்.

இது பண்ணையாளர்,விவசாயிகள் தொடர்பான பிரச்சனையாக மாத்திரம் பார்க்க முடியாது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் இதன் பின் உள்ளது இதன் மூலம் தமிழர் இனப்பரம்பலை குறைக்கும் திட்டம் இருக்கிறதாக சந்தேகிக்க முடியும் இவ்வாறான பல பிரச்சனைகளை வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருவதால் சுதந்திர தின கொண்டாட்டம் என்பது எமக்கானது அல்ல அன்றைய தினம் கரிநாளே. அந்த நாளில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு இளையோர் அணி திரண்டு ஆதரவு வழங்கவேண்டும்.

**கஜரூபன்,**
***மாணவர் சங்கம், கிழக்கு பல்கலைக்கழகம்,***

கிழக்கில் தமிழர்கள் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டுவருகின்றனர். வடகிழக்கில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறை மற்றும் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு எதிராக நாங்கள் எமது எதிர்ப்பினை தெரிவிக்கவேண்டியது கட்டாயமாகும்.

எதிர்வரும் 04ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகிலிருந்து எதிர்ப்பு பேரணி அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைதியான போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். தமிழர் தாயகத்தில் தமிழர்கள் நிம்மதியாகவும் உரிமையுடனும் வாழ வேண்டும். அதற்காக இந்த போராட்டத்தில் அனைவரையும் இணையுமாறு அழைக்கின்றோம் என தெரிவித்தார்.

• • •

## தமிழரசுத் தலை... தொடர்ச்சி ...

வருவது பொருத்தமானதல்ல. அதனை விட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவருக்குத் தான் இந்தப் பதவி கொடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் சிறீநேசனுக்கு பொதுச் செயலாளர் பதவியைக் கொடுப்பதற்கு நாம் இணங்கியுள்ளோம்'' என்பதுதான் சிறீதரனின் பதில்.

சுமந்திரன் அடுத்த காயை நகர்த்தினார். "கிழக்கில் ஒருவருக்கு பொதுச் செயலர் பதவியைக் கொடுப்பதற்கு நான் இணங்குகிறேன். கிழக்கின் மூன்று மாவட்டத் தலைவர்களான சாணக்கியன், கலையரசன், குகதாசன் ஆகியோரில் ஒருவரை நியமியுங்கள்'' என்பது சுமந்திரனின் அடுத்த கோரிக்கை. அதன் மூலமாகவே கட்சி பிளவுபடுவதைத் தவிர்க்கலாம் என்பது சுமந்திரனின் வாதமாக இருந்தது. இந்தப் பின்னணியில்தான் செயலாளராக குகதாசனை நியமிக்க சிறீதரன் இணங்கினார்.

தனக்கு விசுவாசமாகச் செயற்படக் கூடிய ஒருவரை செயலாளராக நியமித்த வெற்றிப் பெருமிதம் சுமந்திரனுக்கு. அதேவேளையில் இந்த இழுபறிகளுக்கு மத்தியில் கட்சியின் மத்திய செயற்குழுவிலும் தனது விவாசிகளை உள்ளே கொண்டுவருவதில் சுமந்திரன் வெற்றி பெற்றிருக்கின்றார். தலைவராக சிறீதரன் இருந்தாலும், கட்சிக் கட்டுப்பாடு சுமந்திரனின் கைகளில் என்பதுதான் தற்போதைய நிலை. அதனால்தான், "அன்று இடம்பெற்ற தெரிவுகள் தவறானவை. மீண்டும் பொதுக்குழு கூட்டப்பட்டு தெரிவுகள் இடம்பெற வேண்டும்'' என்பது சிறீதரன் ஆதரவாளர்களின் நிலைப்பாடு.

சிங்கப்பூரில் தனது மகனின் திருமணத்துக்காக சென்றுள்ள மாவை சேனாதிராஜா எதிர்வரும் 10 ஆம் திகதி நாடு திரும்பிய பின்னர் அதனை நடத்துவதற்கு சிறீதரன் தரப்பு எதிர்பார்த்துள்ளது. அதாவது பெப்ரவரி இரண்டாவது வாரத்தில் இதனை நடத்துவது அவர்களுடைய திட்டம். சிறீநேசனை செயலாளராக்குவதுதான் அவர்களுடைய எதிர்பார்ப்பு. அதற்கேற்ற வகையில் அவர்கள் காய்களை நகர்த்தும் நிலையில்தான், அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில், "அன்று நடைபெற்றவைதான் இறுதியான தெரிவுகள்'' எனக் குறிப்பிட்டு தனது கடிதத்தை சிறீதரனுக்கு சுமந்திரன் அனுப்பியுள்ளார்.

கட்சித் தலைவருடன் இணைந்து செயற்படக்கூடிய ஒருவர்தான் செயலாளராக வர வேண்டும். அதற்காகத்தான் சிறீநேசனை செயலாளராக்குவதற்கு சிறீதரன் திட்டமிட்டிருந்தார். அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோரும் இதனைத்தான் விரும்புகின்றார்கள். அதனை விட்டுக்கொடுக்க அவர்கள் தயாராவில்லை. ஆனால், 27 ஆம் திகதி குழப்பங்களின் மத்தியில் இடைபெற்ற தெரிவுகள்தான் இறுதியானவை என்பதில் சுமந்திரன் உறுதியாகவிருக்கின்றார். இந்தப் பின்னணியில் அடுத்த வாரம் நடைபெறப்போகும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு, பொதுக்குழுவில் என்ன நடைபெறும் என்பது முக்கிய கேள்வியாக உள்ளது.

சிறீநேசனுக்கு ஒரு வருடம், குகதாசனுக்கு ஒரு வருடம் என்ற ஒரு திட்டமும் ஆராயப்படுவதாகத் தெரிகின்றது. இணக்கப்பாட்டுக்கான ஒரு திட்டமாக இது முன்வைக்கப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும், சிறீதரனுக்கு குடைசல் கொடுப்பதற்கு சுமந்திரன் அணி தயாராகியிருப்பதைத்தான் சுமந்திரனின் கடிதம் உணர்த்துகின்றது. ஆக, தலைமைப் பதவி என்பது சிறீதரனுக்கு முள் கிரீடமாகவே இருக்கப் போகின்றது.

• • •

## யாழ் மாணவர்... தொடர்ச்சி ...

நாளாகும்.

முழுத் தீவினதும் ஆட்சியதிகாரத்தினைத் தனது கையில் வைத்துக் கொண்டு, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும், தமிழ் இனவழிப்பை மேற்கொண்டும், தமிழர் தேசம் மீதான திட்டமிட்ட சிங்கள- பௌத்த ஆக்கிரமிப்புக்கள், அதன் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் சிங்கள பௌத்த பேரினவாதம் தொடர்ந்து வருகிறது.

முடிவின்றித் தொடரும் கட்டமைப்புசார் இனவழிப்பிலிருந்து தமிழர் தேசம் பாதுகாக்கப்படல் வேண்டுமாயின், தமிழ்த் தேசத்தின் இறைமையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு அமைய வேண்டும். இனவழிப்புக்கான பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்.

ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ம் திருத்தத்தினை முற்றாக நிராகரித்தமை, திம்புப் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியமை, பொறுப்புக் கூறலை வலியுறுத்தியமை உள்ளிட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையின் உள்ளடக்கமானது, இதுவரைகாலமும் சர்வதேச அரங்கில் பொறுப்புக்கூறலிலிருந்து சிறிலங்காவை பாதுகாத்தவர்களையும், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ம் திருத்தத்தினை நடைமுறைப் படுத்துமாறு கடிதங்களை எழுதி, தமிழ் தேசிய அரசியல் அபிலாசைகளை நீக்கம் செய்யும் வகையில் பெய்யான கருத்தியலை விதைத்த தரப்புக்களையும் அம்பலப்படுத்தியிருக்கிறது.''

## உக்ரைன்... தொடர்ச்சி ...

கடந்த திங்கட்கிழமை(29) தனது அலுவலகத்திற்கு படைத்தளபதியை அழைத்த செலன்ஸ்கி அவரை பதவியில் இருந்து அகற்றி அவருக்கு பாதுகாப்பு சபையில் ஒரு பதவியை கொடுக்க திட்டமிட்டிருந்தார். ஆனால் அந்த செய்தி உடனடியாக வெளியில் தெரியவந்ததால் அதனை அவர் கைவிட்டுள்ளார். பாதுகாப்பு சபை பதவியை சலுஸ்னி நிராகரித்து வருகின்றார்.

முப்படைகளின் தளபதியாக உக்ரைனின் தற்போதைய இராணுவத்தளபதியை அல்லது புலனாய்வுத்துறைத் தளபதியை நியமிக்க செலன்ஸ்கி முற்பட்டபோதும் அதனை அவர்கள் நிராகரித்துவிட்டதாக தொவிக்கப்படுகின்றது.

## முஸ்லீம் நாட்டி... தொடர்ச்சி ...

சென்றிரந்தது.

இந்திய பிரதமரின் மத நம்பிக்கைகளை உலக அளவில் கொண்டு செல்வதற்கு இந்த ஆலயம் உதவும் என அதன் பிரதம குருக்கள் தெரிவித்துள்ளார். இந்தியாவில் 500 வருடங்கள் பழமைவாய்ந்த பாபர் மசூதியை இடித்து இராமர் கோவில் கட்டிய இந்தியா தற்போது முஸ்லீம் நாடு வழங்கிய காணியில் பிரமாண்டமான ஆலயத்தை அமைத்துள்ளது.

## அயோத்தி ... தொடர்ச்சி ...

சட்டம் இந்தியாவின் கௌரவம், இந்தியாவின் அடையாளம் என்றார் மோடி. ஒரு மதச்சார்பற்ற நாட்டின் பிரதமர் இப்படியெல்லாம் பேசலாமா என்று கேட்டால் காந்தியே ராம பக்தன் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். இந்தியக் கனவு ராமர் கோயில் அல்ல. அது ராமராஜ்யம். இராமாயணக் காவியம் விவரிக்கும் கொள்பாடும், கொல்பாடும் இல்லாத சமத்துவச் செல்வநிலை. அது அதானியையும், அம்பானியையும் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்துவிட்டு சாமானிய மக்களை நடுத்தெருவில் நிறுத்தும் கனவல்ல சமதர்மக் கனவு.

காந்தி, ராமாயணத்தில் உள்ளபடி ஒரு நல்ல ராஜ்யம் அமைய வேண்டுமென்கிறார். மோடி ராமனைக் காட்டி மீண்டும் தன் ராஜயத்தை நீடிக்க நினைக்கிறார். அவர் நிஜமான இந்து. இவர் போலியான இந்து. இதுதான் வித்தியாசம்.

ஹிட்லரைக் கடவுள் அளவுக்கு பூதாகரமாகக் காட்டியது ஜெர்மனின் ஆரிய மனோபாவம். அதே தான் இந்தியாவில் நடக்கிறது. யூத இனத்தின் மீதான ஹிட்லரின் வெறுப்புணர்வுக்கு நிகரான ஒரு வெறுப்புணர்வு இந்தியாவில் வளர்த்தெடுக்கப்படுகிறது. அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைப் போன்றே காசி, மதுரா உள்ளிட்ட இடங்களில் சுமார் 3000 பள்ளிவாசல்கள் இடிக்கப்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. ஆர்.எஸ்.எஸ் போன்ற சங்பரிவார் அமைப்புகளின் வெறுப்புப் பிரச்சாரமே இந்த அச்சத்திற்கு அடிப்படை.

நல்ல வேளையாக தென்னிந்தியாவில் ராமனின் தாக்கம் அறவே இல்லை. சென்னை மொழியில் சொல்வதானால், "ராமநாமம் இங்கே போணியாகவில்லை.'' என்கிற தொன்மையான சொற்றொடர். இது சிவனை வணங்கும் மண் என்பதைக் காட்டுகிறது. இங்கே ராமனுக்கு இடமில்லை. பாரதீய ஜனதாக் கட்சி என்பது ஒரு வட இந்தியக் கட்சி என்பது எவ்வளவு உண்மையோ, அத அளவுக்கு ராமன் ஒரு வட இந்தியக் கடவுள் என்பதும் உண்மை!

• • •

## இணையவழிப்... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை முன்னேற்றகரமானதாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அதேவேளை இந்தச் சீர்திருத்தங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவாக அறிவிக்கவேண்டும் என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த அவர், சட்டமூலங்களை தாமதமாக அமுல்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இணைவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விளங்கங்களை சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னர் 70 சதவீதமான மக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அழகுசாதனப் ... தொடர்ச்சி ...

ஏற்பட்டதுடன், பல இடங்களில் சென்றிற புள்ளிகளும் தோன்றியுள்ளதாக பிரித்தானியாவை சேர்ந்து லூசி என்பவர் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் இவ்வாறான பொருட்களை பயன்படுத்தும்பொது அது தொடர்பான தகவல்களை அறிவது முக்கியமானது. பெரும்பாலான பொருட்கள் தோல்களில் ஏற்படும் முதுமைத் தோற்றத்தை தடுப்பவை. எனவே அதில் உள்ள இரசாயணப்பொருட்கள் சிறுவர்களுக்கு ஆபத்தானது என தோலியல் நோய்கள் தொடர்பான வைத்தியக் கலாநிதி ரெஸ் மைக் பேர்சன் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்... தொடர்ச்சி ...

தெரிவிக்கப்படுகின்றது. எனவே தான் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இந்த உடன்படிக்கை தொடர்பான விபரங்களை காங்கிரஸ் சபைக்கு அனுப்புவதை தாமதப்படுத்தி வருகின்றார்.

கடந்த வருடம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவுக்கு சென்ற சமயம் இந்த உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்த உடன்பாடு இரு நாடுகளினதும் இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியமானது என தெரிவித்துள்ள அமெரிக்காவின் வெளிவிவகாரத் திணைக்களபேச்சாளர் மத்தியூ மில்லர், அது தொடர்பில் எப்போது காங்கிரஸ் சபைக்கு அறிவிக்கப்படும் என்பதை கூற மறுத்துவிட்டார்.

கவிதா ஆல்பர்ட்

## இளையோரே சிகரம் நீங்கள்

# அரும்புகளின் கனவுகளை நனவாக்க நனவுக்கோட்டைகளை உருவாக்குவோம்



மலர்கள் பூத்துக்குலுங்கும் சோலைகள் மனதுக்கு இதம் அளிக்கின்றன. மலர்களில் மோதும் பட்டாம்பூச்சிகள் நமது மனங்களைக் குளிர்விக்கின்றன. வான்வெளியில் தோன்றும் முழுமதியானது இதமான சுகராகங்களை மனதில் தோற்றுவிக்கின்றது. திரண்டு எழும்பி, விழுந்து கால்களை முத்தமிட்டுச் செல்லும் கடலலையின் வனப்பு நமது இதமான இதயத்தை வருடிச்செல்கின்றது.

இப்படி இயற்கை விந்தையான நினைவுகளால் வண்ணக் கனவு களை நம் எண்ணங்களில் தோற்றுவிக்கின்றன. "கனவுகள் மெய்ப்பட வேண்டும்" என்றான் பாரதி. அது கலைந்து போகும் கனவுகள் அல்ல. நமது நினைவுகளால் வரையறுக்கப்படும் செயல் திட்டங்களால் உருவாகும் அரங்கேற்ற வடி வங்கள் தான் அவை.

காலமும், கடவுளும் இயற்கையை மாற்றலாம், மனிதன் இயற்கையை மாற்றுவதும், மாற்ற நினைப்பதும் மடமையிலும் மடமை. ஆறு, கடல், ஏரி, குளங்களை குடியிருப்புகளாக மாற்றினால் மழை பொழியும் காலங்களில் இயற்கையின் கண்ணீர் இருப்பிடத்தை அழிக்கத் தான் செய்யும். கனவுகள் இயற்கையோடு இணைந்ததாக இருக்க வேண்டும். வளம் நிறைந்த சோமாலியா வளங்கள் சுரண்டப்பட்டதால், இன்று வாழ்விடத்தைத் தொலைத்து, வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. வறுமை என்னும் கோரப்பிடியில் சிக்கி அழியும் அரும்புகளின் உயிர் காக்கவும், கனவுகளை நனவாக்கவும், போட்டி போட்டுக்கொண்டு அழிக்கும் ஆயுதங்கள் தயார் செய்யும் அரசுகளுக்கு அக்கறை இல்லை.

அப்படியானால் நமக்கு அதில் பங்கு இல்லையா? நாம் தானே நாட்டின் தலைவர்களை தேர்ந்தெடுக்கிறோம். நாம் தானே வருமான வரி மூலம் அரசுக்கு வருமானம் கொடுக்கிறோம், நாம் தானே அரசின் வேலையாட்களாகப் பணிசெய்கிறோம். நாம் தானே நாடு காக்க உயிர் கொடுக்கிறோம். அப்படியானால் அரசு என்பதும் நம்மால் இயங்கும் அமைப்பு என்பதை இதுவரை அறிந்துகொள்ளும் அறிவு நமக்கு இல்லையா?

பணத்துக்காக எதையும் செய்கிற ஒரு மனநிலை நம்மை சுயநல முக்காட்டுக்குள் முடக்கி விடுகிறது. அது நம்மை வைத்து ஆதாயம் தேடு பவர்களுக்கு சாதகமானதாக அமைந்து விடுகிறது. ஏன்? என்கிற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை. 'நான்' என்ற எண்ணம் கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை. "பகுத்தறிவு பிறந்ததெல்லாம் கேள்விகள் கேட்பதனாலே, உரிமைகள் பெறுவதெல்லாம் உணர்ச்சிகள் உள்ளதனாலே" என்பது கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள்.

அப்படியானால் நமது பகுத்தறிவு வேலை செய்யவில்லையா? நமக்கு உணர்ச்சி இல்லையா? இப்படித்தான் கேட்கத் தோன்று கிறது. உரிமைக்குரல் கொடுக்கும் பலரது குரல் வளை நசுக்கப்படுகிறது. தனது உணர்ச்சியை வெளிப்படுத்திய அரும்புக்கும் அரசுகளால் தண் டனை வழங்கப்படுகிறது.

நசுக்குவதும், தண்டனை வழங்குவதும் அரசு என்றாலும், அதை நிறைவேற்றுவது ஒரு மக்கள் பிரதிநிதி தானே! ஏன் அவர்களுக்கு அறிவு வேலை செய்யவில்லையா? உணர்ச்சி தான் அவர்களுக்கு இல்லையா? நாம் தான் முதலில் மாற வேண்டும். அப்போது உலகில் மாற்றம் தானாகவே நிகழும்.

போர்க்களங்களில் இன்று கனவுகள் உருவாகும் முன்பே அரும்புகள் சிதைக்கப்படு கின்றனர். ஊனங்களாக உருமாற்றப்படுகின்றனர். போர்களும் இயற்கைப் பேரழிவுகளும் கனவுகள் அரும்பு முன்னே அவர்களுக்குக் காட்சிகளாகி அச்சத்தையும், மனப் பதற்றத்தையும் ஏற்படுத்து கின்றன.

எனவே இளையோர்களே, நீங்கள் துடிப்புடன் செயலாற்றும் ஆற்றல் பெற்றவர்கள். அரசுகளின்பிரதிநிதிகளாக இருந்து, பெரும்பாலான செயற்றிட்டங்களை நிறைவேற்றும் பங்கேற் பாளர்கள் நீங்கள். நீங்கள் தான் அரசுகளின் அரங்கேற்றத்துக்குத் துணைநிற்பவர்கள். எனவே "சிந்தனை செய்மனமே, செய்தால் தீவினை அகன்றிடுமே" என்ற பாடல் வரிகளுக்கேற்ப அறிவியலில் பிரமிப்புக்குள் நெகிழ்ந்து போகாமல், அழியும் உலகை அழியாமல் காப்பதிலும், அரும்புகளின் கனவுகளை நனவுக் கோட்டைகளாக உருமாற்றுவதிலும் அக்கறை கொண்டவர்களாகச் செயலாற்றுங்கள். உங்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டு, எந்த அரசுகளும் மனித குலத்தையும், இயற்கையையும், உலகையும் அழிவுக்குட்படுத்த அனுமதிக்காதீர்கள் அப்படிநீங்கள்செய் தால், இந்த அழகிய உல கமே ஒரு சோமாலியாவாகிவிடும். அவற்றுக்கான சமிக்ஞையைத் தான் இப்போது உலகில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே விழித்துக் கொள் ளுங்கள். கனவுகள் கோடி சுமந்து நிற்கும் அரும்பு கள் வாழ்வு மலரும் முன்னே அவர்களைக்கல் லறைகளுக்கு அனுப்பாதீர்கள்.

அனைவரும் மகிழ்ச்சியாக இன்புற்று வாழ்வதற்கு இந்த அற்புத உலகம் இறைவனால் நமக்குத் தானமாகத் தரப்பட்டுள்ளது. தானமாகப் பெற்றுக்கொண்ட இந்தக் கொடைகளை நாம் தானமாகப் பிறருக்குக் கொடுப்பது தான், நாம் கடவுளுக்குக் கொடுக்கும் கைம்மாறு. ஆகவே அரும்புகள் வாழ்வில் மகிழ்ச்சியும் மனநிம்மதியும் சூழ்ந்து, சுதந்திரக்காற்றைச் சுவாசித்து, எல்லோரும் இன்புற்று, இயற்கையோடு வாழ வழிசெய்வதே இளையோர்களாகிய உங்களின் கடமை.

ஆகவே நாம் நமக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிவை விரிவு செய்து, வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்து, அழிக்கும் கொலைக் கருவிகளை நம் கரங்களில் ஏந்துவதையும், உருவாக்குவதையும் நிறுத்திவிட்டு உன்னதமான கனவுகளால், புது உலகைப் படைக்கப் புறப்படுவோம். அரும்புகள் வாழ்வில் ஒளியேற்றி, அவர்களும் கனவுகள் என்னும் பூஞ்சோலைக்கும் கற்பக விருட்சங்களாக வளர வழிசமைப்போம்.

• • •

கூட்டமைப்பு ... தொடர்ச்சி ...

அடிப்படையில் இருந்து பேசி, தமிழ் மக்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் எவ்வாறு செல்லலாம் என்பது ஒரு விடயம்.

இரண்டாவதாக, ஒரு சமஷ்டி அலகை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுதான் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அது முடியாமல் போனபோது, 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தனிநாடு என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 2009 இல் அந்தப் போராட்டமும் முடிவுக்கு வந்தபோது, மீண்டும் சமஷ்டி குறித்து பேசப்படுகின்றது. சமஷ்டி பற்றிப் பேசுவது மட்டும் ஒரு கட்சித் தலைவருடைய பணியாக இருக்க முடியாது. இந்த சமஷ்டி என்பதை வென்றெடுப்பதற்கான வழிமுறை என்ன, அதை வென்றெடுப்பதற்கான காலம் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது, அதற்காக நாங்கள் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் போன்ற விடயங்களையிட்டு மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டிய தேவை உள்ளது.

அதனைவிடுத்து நாம் ஒரு சுலோகமாக, சமஷ்டியை நோக்கிச் செல்லப்போகின்றோம் என்ற கோஷமிட்டுக்கொண்டு, அதற்கான முயற்சிகள், அதற்கான நடவடிக்கைகள், அதற்கான வேலைத் திட்டங்கள் எதுவுமே இல்லாமலிருப்பது ஒரு தலைமைத்துவத்துக்குரிய பண்பாக இருக்க முடியாது. அதனால், அவ்வாறான கோஷங்களை முன்வைப்பவர்கள் அதற்கான வழிவரைபடங்கள், அதற்கான தந்திரோபாயங்கள் போன்ற அனைத்தையும் முன்வைக்க வேண்டும். ஆனால், அவை எதுவும் இப்போது இல்லை.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.